போன் நெ. 15. விலை 2 அணா. REGD No. 4642

திராவிடநாடு

மலர் 13 | 10—10—54 | இதழ் 15

காந்தியவாதிகள் கவனத்திற்கு!

"என்ருல் இதைச் சகித்துக்கொண்டிருக்க முடியாது"

"எனக்கு இதனுல் எந்தவிதமான பெருமையும் புகழும் ஏற்பட்டுவிடாது"

"என்னை வேண்டுமென்றே அவமானப்படுத்தவே இக்காரியம் செய்யப்படுகிறதென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்"

"என்னை அறியாத அனுமதேயங்கள் யாராவது இந்தக் காரியத்தைச் செய்திருந்தால், அவர்களின் அறியாமைக்கு வருந்தி, அவர்களை நான் மன்னித்து விடுவேன்"

"என்னை நன்ருகப் புரிந்துகொண்டவர்களே இந்த அடாத காரியத்தைச் செய்திருக்கிருர்கள் என்ருல், அதனை நான் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?"

*

"தாங்கள் இப்படியெல்லாம் கோபித்துக்கொள்ளக் கூடாது"

"செய்யப்பட்ட இக்காரியம் தங்களின் சொந்த நலனை உத்தேசித்தோ, புகழை விரும்பியோ, பெருமையை நாடியோ செய்யப்பட்டதல்ல"

"நாட்டின் அந்தஸ்தை — பாரதமாதாவின் புகழை உலகம் அறியட்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட காரியம் இது"

"இதனுல் தங்களுக்கு ஏற்படும் அவமானம் எதுவும் இருக்கமுடியாது"

"தங்களோடு பழகித் தங்களை நன்ருக அறிந்த் நாங்களே இக்காரியத்தைச் செய்திருக்கிருேமென்ருல், ஏன் இப்படிச் செய்கிருர்கள் என்பதைத் தாங்கள் யோசித்துப் பார்க்கவேண்டாமா?"

*

"நான் ஒரு உண்மையான காந்தியவாதி. பாபுஜியின் பெயரைக் கெடுக்கும் எந்தச் செயலையும் என்னுல் பார்த்துக்கொண்டும் பொறுக்துக்கொண்டும் இருக்க முடியாது"

"மக்கள் மகாத்மாவின் உத்தம தத்துவங்களில் பெரும் பகுதியை மறந்துவிட்டது பற்றி மிக்க வருந்துகிறேன்"

"மேனுடுகளிலிருந்து தோன்றிய ஒளி நம்முடைய சித்தத்தைக் கவர்ந்துவிட்டது தெரிகிறது"

"நாம் மேனுட்டு ஒளியின் பிரகாசத்தில் மதிமயங்கி மேல்நாட்டிலிருந்து வருகின்ற பொருள்களையே அதிக முக்கியமாகக் கருதி நம் நாட்டினைச் சேர்ந்த பொருள்களைக் குறைத்து மதிப்பிடுகிருேம்"

"இந்நாட்டு மக்கள் மகாத்மாகாந்தி காட்டிய நெறியிலிருந்து விலகிவிட்டார்கள்"

"நாம் நம்முடைய பொருள்களுக்கு வைக்கும் மதிப்பைவிட மேல் நாட்டுப் பொருள்களுக்கே அதிக முக்யத்துவம் அளிக்க ஆரம்பித்துவிட்டோம்.

"வேறு நாட்டவர்கள் உற்பத்தி செய்த பொருள்கள் நம்மை விழுங்கப் பார்க்கின்றன."

"பல வருஷங்களாக நாம் அந்நிய சரக்குகளைச் சுதேசிச்சரக்குகள் மாதிரி பாவித்துப்பூரணமாக ஆதரித்து வந்திருக்கிருேம்."

"இந்தக் கெட்ட வழக்கத்தை உணர்ந்த காந்திஜி இதனை அடியோடு ஒழிக்கத் தீர்மானித்தார்."

"அவர் எவ்வளவோ முயன்றும் இந்த நோயை அடியோடு போக்க முடியவில்லை."

*

"காந்தியத்தைப் பின்பற்றுவதிலோ அல்லது அதனைப்பரப்புவதிலோ, நாங்கள் தங்களுக்குச் சளைத்தவர்களல்ல."

"உத்தமர் காந்தியின் உபதேசங்களை நடைமுறையாக்க வேண்டுமென்று தாங்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதுபோலவே, தாங்களும் சாத்தியமானதையெல்லாம் செய்துவிடவேண்டுமென்ற முடிவோடு பணியாற்றி வருகிருேம்."

*

"சாத்தியமானவையா? அப்படியென்ருல், காந்தியடிகளின்உபதேசங்களில் சாத்தியமாகாதவையும் இருக்கின்றனவா?"

"உலகம் போற்றும் உத்தமரின் உபதேசங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாதவர்கள் "நாங்களும் காந்தியவாதிகள் தான்" என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படவேண்டாமா?"

*

"சாத்தியம் என்று நாங்கள் குறிப்பிட்டது, முடிந்தவரை, அதாவது காந்திஜியின் உபதேசங்களைக் காலம் இடமறிந்து சிறிது சிறிதாக நடைமுறைக்குக் கொண்டுவர முயல்கிருேம், என்பது தானே தவிர, அவருடைய உண்மையான உபதேசங்களைப் புறக்க

[16-ம் பக்கம் பார்க்க]

நயவஞ்சகம்

[வே. சம்பந்தன்]

புன்மைச் செயலென்று புழுதி வாரித் தூற்றுபவர்கள், கன்னெஞ்சக் கயவராகத்தான் இருக்கமுடியும்; குடும்பத்துக்கு இழுக்கெனும் சேற்றைப் பூசும் சண்டாளி எனச் சாற்றுபவர்கள், கொடுமைக் குணம் படைத்த கும்பலில் சேர்க்கப்படவேண்டியவர்கள்தான், தாலி கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்யும் பாதகி எனப் பட்டம் சூட்டுபவர்கள், இளமையின் இன்பக் கனவுகள் இன்னதென அறியாத அப்பாவிகள் என்ற பட்டியலில் சேர்க்கப்படவேண்டியவர்கள்; கைப்பிடி நாயகன் இல்லாத நேரத்தில் காதலைக் காட்டவந்திருக்கும் காதகி என்று என்னை நீயும் எண்ணினால், காதகத் தொழில் புரிந்தது யார் என்பதை உன் மனதைத் தொட்டுப் பார்த்துவிட்டு அந்த முடிவுக்கு வா—என்ற வாசகங்களை அவள் கூறவில்லை; அவ்வளவையும் அவள் சிந்திய கண்ணீரே கூறியது—என்று நண்பன் நாகன் தலைகுனிந்தவண்ணமே சொன்னது, என்னைத் திடுக்கிட வைத்தது.

என்னடா, சினிமாப்படம் ஏதாவதொன்றில், கதாநாயகி கூறிய வசனங்களை மனப்பாடம்செய்து ஒப்புவிக்கிறாயா? ஆறு மாதங்கள் கழித்து உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன்; உன் நலத்தைப்பற்றியும், நண்பர்கள் நலத்தைப்பற்றியும் கூறாது, யாரோ ஒருத்தி கூறுத வாசகங்களை, அவள் கண்ணீர் கூறியதாகக் கூறி கலங்கி நிற்கிறாயே? என்ன விஷயம் விவரமாகக் கூறு என்றேன்.

சினிமாக் காட்சியிலே வந்த சோகக் கட்டம் அல்லப்பா; என் சொந்த வாழ்விலே புகுந்து கொண்ட, மாற்றமுடியாத—மறக்க முடியாத வேதனைக் கட்டம். அந்த வேதனைக் கட்டத்தை நானே விலை கொடுத்து வாங்கியதாக இன்று உணர்கிறேன். அன்று இன்பம் என் இருக்குமிடம் தேடி வருவதாக எண்ணி அறிவிழந்தேன். ஆகாரம் இலகுவில் கிடைப்பதாக எண்ணிக் களிப்புக் கொண்டு பொறியில் அகப்பட்டு அல்லற்படும் எலியின் நிலையினானேன். சுகம் வருகிறது என்று எண்ணிச் சோகத்தை அணைத்துக் கொண்டு நான் துடி-துடிக்கிறேன். நான் துடித்தாலும் பரவாயில்லை—என்னால் மற்றொரு உயிரும், என்றென்றும், உடலில் உயிருள்ள வரையிலும் வேதனைப்பட நேர்ந்து விட்டதை எண்ணும்போதுதான், இதற்கு என்ன கழுவாய் தேடுவதென்றே எனக்குப்புலப்படவில்லை. மற்றவர்களுக்கு நல்லது செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருக்க வேண்டுமல்லவா! நான்,மாற்றமுடியாத ஒரு தீமைக்கு என்னை அறியாமலேயே ஆளாகி விட்டேன். நான் செய்த தவறு என்னுடையதல்ல என்று காரணம் கூறி, நான் எளிதில் தப்பித்துக் கொள்ளலாம். புராணங்களும் சாத்திரங்களும் எனக்குப் பக்கபலமாக நிற்கும். என்றாலும், மனச் சாட்சியை வேலியிட்டு மறைக்கமுடியவில்லையே நண்பா! 'துரோகி! துரோகி!' என்று என்னைத் தூற்றிக்கொண்டே இருக்கிறதே! என்ன செய்வேன்?—என்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தவண்ணம் கூறினான்.

யாருக்கு, என்ன தீங்கு, எப்படிச் செய்தாய்? நீயே அத்தீங்கான செயல்புரிய இறங்கினாயா? மற்றவர்கள் உன்னைக் கருவியாக உபயோகப்படுத்திக்கொண்டார்களா? விஷயத்தை விளக்கமாகக் கூறு என்றேன்.

என் மனதிலே குமுறிக்கொண்டிருக்கும் கொந்தளிப்பைக் கூறத்தான் போகிறேன், நண்பா! கூறத்தான் போகிறேன்—கூறினால்தான்—கூறுவதோடு நில்லாது அதற்கோர் கழுவாய் தேடினால்தான் என் மனம் நிம்மதியடையும். நின்றுகொண்டே கூறிட, அவ்வளவு சிறிய சம்பவமல்லப்பா, வா, அந்த மாந்தோப்பில் உட்கார்ந்து பேசுவோம்—என்று அழைத்தான்.

நண்பன் நாகன், என்னுடன் பள்ளியில் படிக்கும் பொழுதிலிருந்தே பழகினவன்—எந்தக் காரியத்திலும் ஆழ்ந்து யோசித்து இறங்குவதாக எண்ணிக்கொள்வான் — இறங்கிய பின் அது தவறென்று உணர்வான்—வருந்துவான். எண்ணித் துணியமாட்டான்; துணிந்தபின் எண்ணுவான். என்ன செய்வது, அவன் குண விசேடங்களில் அதுவும் ஒன்று. மற்றவர்களைக் குறை கூறுவான். ஆனால் மற்றவர்கள் குறைகூறுமளவுக்கு அவன்நடந்து கொள்வான். பள்ளியில் நடந்த ஒரு சிறு சம்பவம் இன்னும் என் கண் முன்னால் நர்த்தனமாடுகிறது. பள்ளி நண்பர்கள் ஒருவரோடொருவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருப்போம். இவைகளெல்லாம் நாகனுக்குப் பிடிக்காது. தன்னந்தனியனாய் ஒதுங்கியே இருப்பான். ஒரு நாள், என் நண்பர்களில் ஒருவனை-பெயர் ஞாபகமில்லை-பார்த்து, எட்டேகால் லட்சணமே என்றால் என்னடா என்றேன்; குலராமன் தூதுவனே என்னடா சொன்னாய் என்று அவன் கேள்வி கேட்டான். பக்கத்தில் நின்றிருந்த நாகனுக்குக் கோபம் வந்துவிட்டது; பளாரென்று ஒரு அறை கன்னத்தில் விட்டான். காலை ஆகாரம்கூட சாப்பிடாமல் பள்ளிக்கு வந்திருக்கிறான்; இவன் கொடுத்த அடியால் மயக்கமடைந்து கிடந்தான். நாங்களெல்லாம் அவனுக்குச் சோடா முதலியவை வாங்கிக்கொடுத்து அவன் மயக்கத்தைத் தெளிவித்தோம். இந்த நிகழ்ச்சியால் நாகன் இரண்டு நாள் பள்ளிக்கூடமே வரவில்லை. உணர்ச்சி வசத்தால் அடித்து விட்டான் — விளைவைக் கண்டபின் வேதனைப்பட்டான். இந்த எண்ணங்களுக்கிடையே நானும் அவனும் மாந்தோப்பு அடைந்தோம்—உட்கார்ந்தோம்.

நண்பன், தன் சம்பவத்தைக் கூற ஆரம்பித்தான்; அவன் முகத்திலே சோக ரேகைகள் காட்சியளித்தன.

நான் கூறப்போவதைக் கேட்டு, இவையாவும் உண்மைதானா என்று ஆச்சரியப்படுவாய்; அதுவும் 1954-ஆம் ஆண்டிலா என்று அதிசயப்படுவாய்; கட்டுக் கதை என்றே முடிவுக்கு வருவாய்; நீ என்ன நினைத்துக்கொண்டாலும் சரி, நான் கூறுவது யாவும் நூற்றுக்கு நூறு உண்மை; இந்தச் சமாசாரம் ஒரு சிறிய அளவு வெளியில் தெரிந்திருந்தாலும் கூடத் தினசரிகளில் கொட்டை எழுத்துக்களில் வெளி வந்து விட்டிருக்கும். கிராமத்தில்

நடந்ததாலும், கிராமத்துப் பெரிய பண்ணையே இக் காரியத்தைச் செய்ததாலும், வெளியில் இதைப் பற்றி யாரும் பேசவில்லை — பேசினால், பெருந் தொல்லையாக முடியுமே என்ற பயம். பணத்தைக் கண்டு பலர் ஊமையாய் நின்றனர்— அந்த ஊமைகளுக்குத் தலைமை ஸ்தானம் வகித்தவன் நான். புரு வைப் பிடிக்க வேடனால் விரிக்கப் படும் வலையெனத் திகழ்ந்தவன் நான்.

பெரிய பண்ணைக்குப் பேரன் முறையிலே திகழ்பவன் நான் என்பது உனக்கு நன்கு தெரியும். அவரது தயவால்தான் நான் படிக்க முடிந்ததும் முன்னுக்குவர முடிந்ததும் என்பதையும் நீ நன்கு அறிவாய். அந்தப் பெரிய பண்ணை பரமசிவம் என்னை, தன்னுடைய தகாத செயலுக்குக் கருவியாக்கிக் கொண்டார்—கதையைக் கூறுது எதையோ கூறுகிறேனே என எண்ணாதே. எப்படி அந்தக் கதையை ஆரம்பிப்பது என்றே எனக்குத் தோன்றவில்லை. நான் கதையென்று கூறுவதற்குக் காரணம், கதையிலேதான் இப்படியெல்லாம் கேள்விப்படலாம். உண்மையில் நடைபெற்றுவிட்டது. என்றாலும், உண்மைச் சம்பவம் என்று கூறுவதற்கே உடல் பதறுகிறது.

ஒரு நாள், எனக்குப் பெரிய பண்ணையிடமிருந்து அழைப்பு வந்தது. ஓடோடியும் சென்றேன். பண்ணையார், பேரன் என்றும் என்னைப் பாராது, சம அந்தஸ்தாக உட்காரச் சொன்னார். நான் பெரிதும் பெருமைப்பட்டேன். "தம்பி, படிப்பெல்லாம் முடிந்துவிட்டது; இனி என்ன செய்வதாக உத்தேசம். உன்னை உயர்ந்தவனாக ஆக்குவது என் பொறுப்பு; எனவே, நீ எங்கும் யாரிடமும் அடிமை வேலைக்குப் போகவேண்டாம். பண்ணையை நீயே மேற்பார்வை பார்த்துக்கொள். எனக்குந்தான் யார் துணை! எல்லாம் உன் பொறுப்புத்தான்!" என்றார்.

இவ்வளவு பெரிய பதவியைக் கேட்ட நான் கற்சிலையானேன்—கனவிலேயும் நினைக்காதது; எனவே, மௌனமானேன்.

"ஏன், தம்பி பேசாமலிருக்கிறாய். தாத்தா ஏதோ விளையாட்டாகக் கூறுகிறார் என்று நினைக்கிறாயா? உண்மைதான் தம்பி! இன்றையவிருந்து நீ இங்கேயே இருந்துவிடு, கணக்கு வழக்கெல்லாம் நீயேபார்த்துக்கொள்" என்றார்.

பாலைவனத்திலிருந்து பசுஞ்சோலைக்குப் போவதாகப் பெருமிதப்பட்டேன். பெரிய பண்ணையில் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். ஊரே என் நிலையைக் கண்டு களித்தது.

பரமசிவம், என்னை எவ்விதக் கேள்விகளும் கேட்பதில்லை; எல்லாம் என் இஷ்டப்படிதான். இப்படி ஒரு திங்கள் இன்பமாகக் கழிந்தது.

"தம்பி! உனக்கும் கல்யாணம் ஆகும் பருவமாகிவிட்டது. அடுத்த ஊர் அம்பலவாணரின் மகளை உனக்குக் கல்யாணம் செய்துவைக்கலாம் என்று நினைக்கிறேன்; வேண்டுமானால், ஒரு முறை நீ பெண்ணைப் பார்த்துவிட்டு வா" என்றார்.

அதிர்ஷ்டத்தின்மேல் அதிர்ஷ்டம்! இன்பத்தின்மேல் இன்பம்!! அதிர்ஷ்டம் அணைக்க வரும்போது அதை உதறித்தள்ளலாமா? இன்பம், நான் இருக்குமிடந் தேடி வருகிறது! சந்தர்ப்பத்தை நழுவவிடலாமா? சந்தோஷமாக ஒத்துக்கொண்டேன்,

தாத்தாவோ இரண்டு தாரங்களை இழந்தவர்; ஒரு குழந்தையும் கிடையாது. எனக்கு மணம் செய்வித்து, என்னையே பண்ணையின் சொந்தக்காரனாக ஆக்கிவிட்டதாகக் கனவு கண்டேன்—அவரின் பெருந்தன்மையை எண்ணி வியப்படைந்தேன், ஊரார் அவரைத் தூற்றுவது அடாதது என எண்ணினேன்.

அம்பலவாணரின் மகளைக் காணச் சென்றேன்; அவளது அழகைக் கண்டு, அவள் இன்பச் சித்திரத்தை என் இதயத்தில் பதியவைத்துக்கொண்டேன் — திரும்பினேன்.

தாத்தாவுக்கு என் சம்மதத்தைத் தெரிவித்தேன், முகூர்த்த நாள் குறிப்பிடப்பட்டாய்விட்டது. நான் இன்பக் கடலிலே மூழ்கிக் கிடந்தேன். அதிக இன்பம் அடைவது, பின்னால் வரும் இடருக்கு அறிகுறி என்று எனக்கு அன்று புரியவில்லை.

திருமணத்திற்கு முன்னாள். பெண் அழைப்புச் சடங்கெல்லாம் நிறைவேறிவிட்டது. நடுநிசி. நான் நாளை அம்பலவாணரின் மகள் இன்பவல்லியோடு, எப்படி எப்படிப் பேசுவேன், எவ்வளவு ஆனந்தத்தில் மூழ்கியிருப்பேன் என்ற கனவுகளைக் கண்டுகொண்டிருந்தேன். அந்த இன்பக் கனவுகளைப் பொடிப்பொடியாக்க, யாரோ, என்னைத் தட்டி எழுப்புவதை உணர்ந்து எழுந்தேன். பக்கத்தில், தாத்தா பரமசிவம் நின்றுகொண்டிருந்தார்.

நான் பதைபதைத்து எழுந்து நின்றேன்.

உட்கார், தம்பி! உன்னோடு சில விஷயங்கள் பேசவேண்டும் என்றார்.

அர்த்த இராத்திரியிலே என்ன அவ்வளவு அவசரமான அவசியமான விஷயம் இருக்கும் என்று என்னால் ஒன்றும் நிர்ணயிக்கமுடியவில்லை.

என்ன தாத்தா! என்றேன்.

தம்பி! நீ எனக்கு ஒரு பெரிய உதவிசெய்யவேண்டும்; மறுக்கக் கூடாது என்றார்.

நானா உதவிசெய்ய—தங்களுக்கு! என்ன தாத்தா! என்னால் தங்களுக்கு என்ன உதவி தேவை! அதுவும் தங்களால் உயர்வடைந்த நான் எந்த உதவியானாலும் செய்ய என்றும் கடமைப்பட்டவன் என்றேன்.

நீ செய்வாய் என்று எனக்குத் தெரியும் தம்பி. அதனால்தான் உன்னைத்தேடி கேட்க வந்திருக்கிறேன். நான், இரண்டு தாரங்களை இழந்தவன்; ஒரு வாரிசும் அற்றவன் வயதோ ஐம்பதை நெருங்கிவிட்டது. எனவேதான்......

அதனால் என்ன தாத்தா, நான் தான் எல்லாப் பொறுப்பையும் கவனித்துக்கொள்கிறேனே.

கவனித்துக்கொள்கிறாய்...! இவ்வளவு பெரிய பண்ணையை எனக்கென்று ஒரு சொந்த வாரிசு இல்லாமல் விட்டுவிட மனம் இடந்தரவில்லை, தம்பி! அதனால்......

அதனால், என்ன தாத்தா!

நான், மற்றொரு திருமணம்

வருந்துகிறோம்

நமது கழக அனுதாபியும் கொள்கைப்பற்றும் கொண்ட காஞ்சித் தோழர் சிவமுருகனார் அவர்கள் **5—10—54-ல்** திடீரென மாரடைப்பால் இறந்தார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிறோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு நம் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்துகொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

வயது ஐம்பதுக்கு நெருங்கிவிட்டது என்று நீங்களே கூறினீர்களே, தாத்தா! தங்களுக்கு யார் பெண்.....

எனக்கு யார் பெண் தருவார்கள் என்றுதானே கேட்கிறாய்! பலர் தருவார்கள், தம்பி! பணம் இல்லா இடங்களில் எத்தனையோ இளம் பெண்களை, கல்யாணம் செய்ய வக்கில்லாமல் வைத்துக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் பலர் இருக்கின்றனர்! ஒரு வார்த்தை கேட்டால் போதும் தம்பி!

சரி செய்துகொள்ளுங்கள். உங்கள் விருப்பம் அதுவானால், நான் எப்படி அதைத் தடுக்க முடியும்?

அதற்கு உன்னை யோசனை கேட்க வரவில்லையப்பா! அம்பலவாணரின் வீட்டுக்கு முன்பு ஒரு நாள் நான் சென்றிருந்தபொழுது, அம்பலவாணரின் பெண்ணைப் பார்க்க நேர்ந்தது! அது முதல்...!

அது முதல்...! என் குரல் சற்று உச்ச நிலைக்கு ஏறிற்று.

பொறுமையாகக் கேள், தம்பி! அது முதல், அந்த இன்பவல்லியை என் இல்லறஜோதியாக்கத் திட்டமிட்டுவிட்டேன், தம்பி!

உங்கள் இல்லறஜோதியாகவா...

ஆமாம்! என் இல்லறஜோதியாகத்தான்! ஏன், ஆச்சரியப்படுகிறாய், என் பெருமைக்கு, என் செல்வாக்குக்கு, அவள் என் இன்பவல்லியாக இருக்கக்கூடாதா?

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை, நண்பா! அவருடைய உள்ளெண்ணம் எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது.

என்ன தம்பி, மௌனமாய்விட்டாய்; நான் உனக்குச் செய்த நன்றிகளை நினைத்துப் பார்; நான் உதவியிராவிட்டால், நீ நாடோடியாகத் திரிந்துகொண்டிருப்பாய். உன்னைப் படிக்கவைத்து, பண்ணையின் பொறுப்பையே உன்னிடம் தந்துள்ளேன். நான் செய்துள்ள உதவிகளுக்கு, நீ எனக்கு ஒரு சிறு உதவி செய்யக்கூடாதா!

உதவியா கேட்கிறீர்கள் — என் உயிரை அல்லவோ கேட்கிறீர்கள்.

என்னடா, உன் உயிரையா கேட்கிறேன்? நான் கெஞ்சுகிறேன்; நீ மிஞ்சுகிறாயே! இனி நான் உன்னைக் கெஞ்சப் போவதில்லை; நாளைக் காலை; தாலிகட்ட இருக்கும் கட்டம் வரை நீ மணமகன்; தாலி கட்டப்போகும் மணமகன் நான்" ஆம், உறுதியாகக் கூறிவிட்டேன். இந்த விஷயத்தில் என்னுடன் ஒத்துழைத்தால் என்றும்போல் நீ இங்கு வாழலாம்; இல்லையேல் உன் வாழ்வை முடிக்கும் கட்டாரியாக நான் மாறிவிடுவேன் என்பதை எண்ணிக்கொள்—என்று கூறிவிட்டு, கிழவன் சென்றுவிட்டான் — வெளியே கதவைப் பூட்டும் சத்தமும் கேட்டது.

நண்பா! கதவைமட்டும்தானா அந்தக் கிழவன் பூட்டினான்; என் வாழ்க்கையையே அல்லவா பூட்டிவிட்டான். இந்த ஏற்பாட்டுக்குத்தானா, என்னை இன்ப ஏணியில் ஏற்றிவைத்தான். ஒரு இளம் பெண்ணின் வாழ்வைப் பலியாக்க நான்தானா கருவியாக ஆகவேண்டும்—இப்படி எண்ணாத, எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கித் தவித்தேன்.

பொழுது புலர்ந்தது!—என் இன்பப் பொழுதில் இருள் சூழும் படலம் தொடங்கிவிட்டது.

எனக்கு இரண்டு மாப்பிள்ளைத் தோழர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்—நான் எங்கும் ஓடிவிடாமல் இருக்க!

திருமணச் சடங்குகள் ஆரம்பமாயின! தாலி கட்டும் நேரம்! பெண்ணின் தாயாரையும் தந்தையையும் யாரோ பின்புறம் அழைத்துச் சென்றார்கள். நான் மாப்பிள்ளைத் தோழர்களால் மணப்பந்தலிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டேன்.

முகூர்த்த மேளம் முழங்க, அய்யரின் மந்திர ஒலியுடன், பெரிய பண்ணை பரமசிவம், இன்பவல்லியின் கழுத்தில் தாலி கட்டினார்.

இன்பவல்லியோ, அம்மா, கிழவன்! கிழவன்!! எனக் கத்தினாள். அம்மா அங்கிருந்தால் தானே!

சூழ இருந்த சுற்றத்தார்கள் இந்தச் சோக நிகழ்ச்சியைக் கண்டு, ஏதும் பேசமுடியா ஊமையராயினர். நானோ ஓர் அறையிலே தள்ளிப்பூட்டப்பட்டிருந்தேன்.

பெரிய இடத்து விஷயம்—நமக்கென்ன என்று ஒவ்வொருவரும் நழுவி விட்டனர். எதிர்க்கத் திறனுள்ள சிலரோ பரமசிவத்திடம் கடன் பட்டவர்கள்.

என்ன நண்பா! இவையாவும் நான் கட்டிச் சொல்லும் கதையென்று எண்ணுகிறாயா எழுத்துக்கு எழுத்து உண்மை!

நண்பன் கூறியவைகளைக் கேட்டு என்னால் நம்பவே முடியவில்லை. அசட்டுச் சிரிப்பொன்றை வீசினேன்.

விவாகரத்து மசோதா நிறைவேறி விட்டது, நாகா, அந்தப் பெண்ணின் பெற்றோர்களைக் கொண்டு விவாகரத்துச் செய்துகொண்டு வந்து விடலாமே என்றேன்.

பெண்ணின் பெற்றோர்களா, அவர்கள் தான், அவள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான், அவள் தலையில் அப்படி எழுதியிருந்தால், நாம் மாற்றியா அமைக்க முடியும்? என்கிறார்களே—என்றான்.

அப்படியானால் பேசாமல் விடு என்றேன்.

நான் பேசாமல்விட்டுவிடுகிறேன், நண்பா, அந்தப் பெண் என்னைப் பேசாமல் இருக்கவிடவில்லையே, அவள் வாழ்வைப் பாழாக்கினது, நான்தான் என்று தூற்றுகிறாளே, என்னுடைய கோழைத்தனத்தால், தான் பரமசிவத்தின் மனைவியாக இன்னும் இருப்பதாகக்கூறுகிறாள்.

கேள், நண்பா! நேற்றுக் கிழவன் ஊரில் இல்லை. இரவு என்னை வரச் சொன்னாள். சென்றேன்; கதறினாள். தன்னுடைய வாழ்வுக்கு ஒரு விடிவெள்ளி கிடையாதா எனத் தேம்பினாள். விவாகரத்து சட்டத்தால், வழக்கிடலாம் எனக்கூறினேன். போடலாம்—நான் தயார். நான் போட்டதாகத் தெரிந்தால் அன்றே நான் ஒழிந்தேன்—கிழவன் சும்மா இருப்பானா என்றாள். அதுவும் உண்மைதானே என்று எண்ணி ஊமையானேன். அவள் கண்ணீரால் என் கால்களைக் கழுவினாள். செய்வகை அறியாது திகைத்த நான், சோர்வுடன் திரும்பிவந்து விட்டேன்—என்றான்.

திம்மரெனத் தனக்கு ஓர் பதவியையும்கொடுத்து, திருமணமும்செய்து வைக்கிறேன் என்று கூறிய பரமசிவத்தின் உள்ளக்கிடக்கையை உணராது—எண்ணிப்பாராது—சிக்கலில் அகப்பட்டுக்கொண்டு அலறும் நண்பனின் நிலையை நோக்கினேன்.

நானோ, கிழவனின் நயவஞ்சகத் தன்மையும், ஒரு இளமங்கையின் வாழ்வைப் பலியாக்கிய கொடுமைச் செயலையும் எண்ணிக் கோபம் கொண்டேன். பணத்திமிரால், இன்றும் பலர், இப்படிப்பட்ட இழிவான

காரியங்களைத் துணிந்து செய்கிறார்களே என்று எண்ணினேன்.

"என்னப்பா, இதற்கென்ன முடிவு சொல்கிறாய்" என்றான், நாகன்.

"ஏற்றதொரு முடிவை என்னால் சொல்ல இயலவில்லை. நண்பா! எதற்கும் அவசரப்படாதே, காலம் இதற்கொரு முடிவைக் காட்டும் என்று கூறிவிட்டு, எதற்கும் நீ வெளியூரில் சிலகாலம் தங்குவது நலம் எனக்கூறி என்னுடன் நாகனை அழைத்துவந்துவிட்டேன்.

ஒரு வாரங்கழித்து, தினசரி ஒன்றில், "ஒரு பெண்ணின் பரிதாப மரணம்—கிணற்றில் விழுந்து இறந்தாள்—கிழவனை மணந்ததால் நேர்ந்த கோரம்" என்ற தலைப்புடன் இன்பவல்லியின் இறந்த செய்தி வெளியாகி இருந்தது. நண்பன் பதைத்தான்—துடித்தான் — தன்னால் ஒரு உயிர் மாள நேர்ந்ததை எண்ணி எண்ணி உளம் புழுங்கினான்.

பணவெறிச் சகதியால் ஓர் இளநங்கையின் வாழ்வே பலியிடப்பட்டு விட்டது. என்ன செய்வது? என்று இந்தச் சமுதாயம் உருப்படுமோ? இத்தகைய இடர்கள் நேராவண்ணம் செம்மைப்படுமோ?—என்று எண்ணினேன்—நண்பனுக்கு பல ஆறுதல் கூறித் தேற்றினேன். இன்று அவன் நடைப்பிணமென உலவுகிறான். ★

காற்றிலே கோட்டை கட்டி!

"வாடிய மரம், அவன்; நீயோ வசந்தத் தென்றல்!"

"என்ன செய்வது, என் தலைவிதி"

"விதியையும் வெல்லலாம், மதியால்—என்றனர், பெரியோர்"

"வழி கூறுங்கள், அன்பரே!"

"இன்று இரவு உன்னைக் கட்டிக் காக்கும் கிழவன் தூங்கும்போது ஓடிவந்துவிடு, என்னிடம்"

"வந்துவிட்டால்..."

"வேற்றூர் சென்று வீணையும் நாதமும் ஆகிடுவோம்"

"சரி!"

"வரும்போது..."

"என்ன செய்யவேண்டும்?"

"வீட்டிலிருக்கும் பணம், நகைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வந்துவிடு"

"நான் போதாதா! அவை ஏன்?"

"அசடே, அவனுக்குப் புத்திவர வேண்டுமல்லவா? கையில் காசிருக்கிறது என்கிற திமிரால்தானே, உன்னைக் கல்யாணம் செய்துகொண்டு, கண்ணீர் சிந்தவைத்தான். அதற்குப் பழி வாங்க வேண்டாமா, பைங்கிளியே!"

★

பாதி இராத்திரியில் பாவை வந்தாள், கள்ளக் காதலனின் கட்டளையை நிறைவேற்றியவண்ணம்! சின்னக் கிளி அவள் — சிக்கிக் கொண்டாள் ஒரு தொண்டு கிழத்திடம். அடுத்த வீட்டு அமுதம், பக்கத்து வீட்டு பார்வதி, எதிர் வீட்டு எல்லாம், எல்லோரும் சுகமாக இருக்கும்போது, தான்மட்டும் இப்படிக் கிடந்து கஷ்டப்படவேண்டியிருக்கிறதே என்று அவள் எண்ணாத நேரமில்லை. இந்த விஷயத்தை எப்படியோ தெரிந்து கொண்டான், அந்த வாலிபன். வீதியில் நடமாடினான். அவள் விழிக்குள் புகுந்தான்; இன்று வெளியேற்றவும் துணிந்தான். இருவரும் ஊரைக் கடந்துபோய்க் கொண்டிருக்கின்றனர். இடையில் ஒரு ஆறு. அதிலே பெரு வெள்ளம்.

"கண்ணே என்ன செய்வது?"

"வெள்ளத்துக்கு ஒரு வணக்கம் செய்துவிட்டு, என்னையும் அள்ளிக் கொண்டு அக் கரை செல்லுங்கள், அன்பே!"

"வலியவந்து வழங்கும் வசந்தமே ஆசைதான் எனக்கும். ஆனால், அந்த மூட்டை?"

"பண மூட்டைதானே? ஆற்றில் வீசிடவா? இல்லை, அங்கே எறியவா? துரையே, உங்கள் தோளில் தொத்தும் சுகத்தைவிட, இந்தப் பணமூட்டை பெரிதா?"

"பைங்கிளி, பண மூட்டையையும் இழக்கக்கூடாது. நீயும் நானும் சேர்ந்து நீந்தியபடியே அக்கரை செல்லவேண்டும். அதற்கோர் வழி சொல்லட்டுமா?"

"என்ன நாதா?"

"முதலில் மூட்டையைக் கொண்டுபோய் அங்கே வைத்து விட்டு வருகிறேன். பிறகு, நாம் இருவரும்......"

சரி, என்றாள், தையல். மாமலையையும் கடுகு என்று எண்ணக் கூடிய நேரம்—காதலனின் கையில், மூட்டையைக் கொடுத்தாள்! அவனும், ஓடும் வெள்ளத்தைத் தாவிச் சென்றான்! அக்கரையும் சேர்ந்தான். ஆனால், திரும்பவில்லை — எழிலாளிடம் கிடைத்த மூட்டையுடன், எடுத்தான் ஓட்டம்? ஏங்கினாள், இவள். அழுதாள். பண மூட்டையைவிட அந்தக் காதலனே பெரிதென எண்ணினாள்—அவனோ, இவளைக் கைவிட்டு ஓடி விட்டான். எங்கே போவது இனி. உள்ளதும் போச்சே — என்று உளறலானாள் கன்னி.

*

"அந்தச் சக்தி", இருக்கிறதே, அது அபரிமிதமாக வளர வேண்டுமாம்! அன்பர் ஆச்சாரியார் வினோபாபாவே, சொல்லுகிறார்.

கன்னியின் கையிலிருந்த பணத்தைப் பறித்தானே, காதலன் உரு

வில் வந்த எத்தன், "அந்தச்சக்தி", அல்ல; அது, வளர வேண்டும் என்று சொன்னால் கூட, ஏதோ சக்தி வளர வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்ளலாம்.

ஏமாந்தாளே, ஏந்திழை. அந்தச் சக்தி, அபாரமாக வளர வேண்டுமாம். அப்போதுதான், பிறருடைய கவனத்தைக் கவர முடியுமாம்.

தளிர்களை நாடும் தள்ளாடிடும் வயதினருக்குப் புத்தி புகட்டுவதற்காகவே, தையல் மீது மோகம் கொண்டதாகச் சொன்னான், எத்தன்—'இலட்சியம்' நிறைவேறியதும் எடுத்தான் ஓட்டம். ஒரு வகையில், அவனைக் கெட்டிக்காரன் கூட என்னலாம். அந்தச் சக்தி வளர வேண்டும் — என்று, ஆச்சாரியார் தெரிவிப்பதில் கூட அர்த்தமிருக்கிறது. ஏனெனில், "பணம் அதிகமாக இருந்ததால் தானே திருடினான். எதற்காகப் பணம் அதிகமிருக்க வேண்டும்?" என்று கேட்ட காந்தியடிகளின், சீடர், அவர்.

ஆனால், அவர் வளரவேண்டுமெனச் சொல்வது, ஏமாறும் சக்தியை! அந்தச் சக்தி வளர்ந்தால் தான், பிறருக்கு, விழிப்புவருமாம்! அவளைக் காண்போர், 'ஆகா! அந்த அழகி எவ்வளவு கஷ்டப்படுகிறாள். காரணம், யாரோ ஒருவன் அவளை ஆசைகாட்டி ஏமாற்றியதால்தானே. இப்படி ஆசை காட்டினால் ஏமாந்துபோகக்கூடுமல்லவா, நம்மிடமிருக்கும் இளம் மனைவிகள். எனவே, இனியும் நாம் இவர்களுடன் இருப்பது தகாது. ஆகவே, எல்லோருக்கும் விடுதலை! உங்கள் மனதுக்கிசைந்த காதலனை நாடி, களிப்பீர்! நாங்கள், கானகம் செல்லுகிறோம்' என்று ஏனைய கிழங்கள், எண்ணுமாம். அந்தச் சக்தி, வருமாம்! அன்பர் ஆச்சார்யார், கூறுகிறார்.

புலியும் பசுவும் ஒரே இடத்தில் நீர் குடித்ததாக எழுதப்பட்டதை அடிக்கடி படிக்கும், விபத்து போலும், இது. கனவுலக மனிதர் போலக் கூறுகிறார்! புலிகளுக்குப் புத்திவர, புள்ளிமான்கள், ஏமாற வேண்டுமாம். பணம் படைத்தோருக்கு அறிவுவர ஏழைகள், 'தியாகம்' செய்யவேண்டுமாம்.

அவன்தான், அன்றாடம், தன்னுடைய உடலையும் உயிரையும் 'இழந்தபடி' இருக்கிறானே — அது போதாதாம். இருக்கின்ற ஓட்டைக் குடிசையையும். வைத்திருக்கிற சின்னஞ் சிறு பூமியையும், "தீன தயாளர்களே, மார்க்க பந்துகளே, இந்தாருங்கள், இந்தாருங்கள்" என்று இவர்களிடம், கொடுத்துவிடவேண்டுமாம். ஏனெனில்,

'தியாகி'களுக்கு!!

★

கருத்து வேற்றுமை என்றால் பகைமை என்று அர்த்தம் அல்ல. அது பகைமை என்றால் நானும் என் மனைவியும் பெரும் பகைவர்களாகி விடுவோம். உலகத்தில் அபிப்ராய பேதமில்லாத இரண்டு மனிதர்களைப் பார்த்ததில்லை. என்னோடு கருத்து வேற்றுமை கொண்டுள்ளவர்களை என் நெருங்கிய நண்பர்களைப்போல பாவிக்கின்றேன். இனியும் அப்படியே செய்ய முயற்சிக்கிறேன். ஏன் அதுதானே நியாயம்.

★

கடவுளைக் காண இமய மலைச் சிகரத்துக்குப் போக வேண்டியதில்லை. மனித சமூகத்துக்கு வெளியே அவரைக் காண முடியாது.

★

உலகில் உழைக்கவே மனிதர்களைப் படைத்தார் கடவுள். உழைப்பின்றி உண்பவர்கள் திருடர்களுக்குச் சமம். உழைப்பில் உயர்வு தாழ்வு கிடையாது. சோம்பேறியாய் உண்பவர்களைவிட தெருச் சுத்தி செய்யும் தொழிலாளியே மேலானவர்.

—காந்தியார்.

இவர்கள், **பூமி தானமும், வாழ்வு தானமும்,** வாங்கிக்கொண்டிருக்கிறார்களல்லவா? அதனால்.

அன்பர் வினோபாவேயை, ஒருவர் கேட்டாராம்:-

"ஏழை எளியோர்டமிருந்தும் நீங்கள் நிலம் பெறுகிறீர்களே—இதனால், அவர்களின் ஏழ்மை இன்னும் படுமோசமாகி விடாதோ?"

அதற்கு, அவர் அளித்திருக்கும் பதில் என்ன?

"ஏழ்மை அதிகமாயினும் நம் செல்வம் **வேறுவகையில்** இதனால் பெருகும். நம் நாட்டின் ஏழைகள் நம்மைவிடக் கீழ்ப்படியில் உள்ளவர்களைக் கருதி தம்மிடமுள்ளதையும் **தியாகம்** செய்ய முன்வருவதனால் **உருவாகும் சக்தி** இருக்கிறதே அது உறக்கத்தில் ஆழ்ந்துள்ள **தனவந்தர்களையெல்லாம் தட்டி** எழுப்பக் கூடியது. இதன் பிறகு தனவந்தர்களால் அதிக செல்வத்தைத் தம்மிடம் வைத்துக்கொண்டு தூங்கவே முடியாது"

ஆச்சார்யாரின், பதில் இது! நாட்டின் செல்வம் வேறுவகையில் பெருகுமாம். கிழக் கணவனிடம் வதைப்பட்டவள், கள்ளக் காதலனை நம்பி, கையிலிருப்பதைக் கொடுத்துவிட்டு — பிறகு, எண்ணிக்கொள்ள வேண்டுமாம், நம்முடைய, பை குறைந்துவிட்டாலும், அவருடைய, பை கனமாகியிருக்குமல்லவா, என்று.

நாடு, எப்படியோ, கெடு கெட்டவர்களின் பாவையாகிக்கிடக்கிறது. அந்தப் பாவைக்கு பக்கத்து ஊரையும், இச்சைச் சொற்களையும், காட்டி வலைவீசுகின்றனர், பல எத்தர்கள். கதையில் வந்தவளைப் போல, அவள் இன்னும் கருத்தை இழக்கவில்லை. இந்நிலையில், நாட்டு நல்லாளுக்கு, உபதேசம் புரிகிறார், இந்த ஞானாசிரியர்.

இருப்பதையும் தியாகம் செய்.

அப்போது ஓர் சக்தி உருவாகும்.

அது, தனவந்தர்களைத் தட்டி எழுப்பும்.

*

இந்தப் போதனை, அகில உலகத்துக்கே தரப்படும் அறிவு!-என்று ஆர்ப்பரிக்கின்றனர், யாவரும். இதில் ஆச்சரியம், நாட்டையாளும் கிழக் கணவர்களே, கின்னாரம் கொட்டுவதுதான். ஏழையின் தியாகத்தில் – அடடா, எவ்வளவு அக்கரை வழிகிறது. அதை எடுத்து ஆச்சாரியார் சொல்லும்போது, அவர்களுக்கு என்னென்ன 'ரசம்' ஊறுகிறது!

தியாகம் செய்யவேண்டுமாம், ஏழை!! —அவன், உயிரை விடாமல், இந்த

உலகில் நடமாடுவதே, ஒரு தியாகம்தானே?

அதுகூடக் கிடக்கட்டும் — அப்படி அவன் தியாகம் செய்வதைப் பார்க்கும்போது, ஒரு சக்தி உருவாகுமாம். அது, பணக்காரர்களின் மனதுக்குள் புகுந்து, பயங்கரமான மாறுதலைக் கொண்டு வருமாம்!

அந்தக் கால ரஷ்யாவில், **கேபான்** எனும் மதகுருவும் இப்படித்தான் சொன்னனாம், "மக்களே! சர்க்கார் மீது கோபப்படாதீர்கள்; சர்வேஸ்வரனும் சர்க்காரும் ஒன்று. கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு, சர்க்காரை கையெடுத்துத் தொழுதால் ஏற்படும் குரல் ஒலி அரண்மனைக்குள் கேட்கும். பிறகு, வழி பிறக்கும்" என்று. அதையும் நம்பினார், ரஷ்யநாட்டு மக்கள்! கிடைத்தது என்ன—சரிதத்துக்கு ஒரு **'இரத்த ஞாயிறு'**; ரஷ்ய மண்ணுக்கு பல பிணங்கள்; மக்கள் மன்றத்துக்கு துப்பாக்கிக் குண்டுகள்.

அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னும், ஆச்சாரியா, இங்கே ஞானகுருவாகிறார்—"மக்காள், நம்முடைய தியாக புத்தியைக் கண்டு, பிறர் வெட்கப்படவேண்டும்" என்பதாக. அவரையே கேட்கிறோம், இதுவரை எத்தனை ஏழைகளிடம் எதைதை தானமாகப் பெற்றிருக்கிறார்கள், இவர்கள். அதனைக் கண்ட பிறகும், எத்தனை தனவந்தர்கள், அள்ளி வழங்கியிருக்கிறார்கள்?

பதில், நாம் தர வேண்டியதில்லை' அண்மையில், இங்கு வந்து சென்ற சங்கரராவ் தேவ் என்பவர், சொன்னாராம்,

"நான் எதிர்பார்த்த அளவு இங்கு பூமிதானம் கிடைக்கவில்லை. பலருடைய மனம் இன்னும் இளகவில்லை"

நிலைமை இது. எனினும், ஆச்சாரியா, தியாகம் செய்யச் சொல்லுகிறார், தியாகம்.

இந்தப் போதனை, எதற்குப் பயன்படும்?

காங்கிரசாரும் 'பிரஜா'க்களும் நினைப்பதுபோல, பொதுவுடைமை மலர்வதையா, தடுக்கும்? ஒருக்காலும், இல்லை.

அழகான படவிமர்சனம்.
இசுலேவர் பாராட்டு.
பண்டிதர், பராக்கு.
பிர்லாவின், நன் கொடை.
பெரியவர்கள் ஆசீர்வாதம்,

இதற்குத்தான், பயன்படுமே யொழிய, ஏழையின் இதயத்தில் சிறிது கூட நம்பிக்கை நாதத்தை எழுப்ப முடியாது. இவ்வண்ணம் கூறுவதால், விநோபாவேயையும், அவரது சிடகோடிகளையும் 'பிர்லாவின் தாசர்கள்', என்று நாம் எள்ளி நகையாடவில்லை. தமது நோக்கமே சிறந்தது எனும், நன்னோக்கம், இருக்கலாம் அவர்களிடம். ஏழைகளின் தியாகத்தைக்கண்டு தனவந்தர்கள், வெட்கப்படக்கூடும் — என்று, திடமாக நம்பக்கூடும். அவர்களுக்கு, அன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கிழக்கனவர்கள், பருவக் குமரிகளுக்கு விடுதலை தரமாட்டார்கள்— இரண்டு பூட்டுகளைப் போட்டு, கதவுகளைப் பூட்டுவார்கள். தனவந்தர்கள், ஏழைகள் தந்ததிலும் பங்கு பெற வருவார்களேயொழிய, தாங்கள் எதையும் இழக்கமாட்டார்கள்.

விநோபா அல்ல, இதற்கு முன்னர் கூட, எத்தனையோ ஆத்மஞானிகள், அரிய பல உபதேசங்களைச் செய்திருக்கிறார்கள் — வாழ்வாவது மாயம்!—உள்ளேயிருக்கும் மூச்சு, வெளியே விட்டால் போச்சு —ஆருயிர் போனதும் அள்ளிக் கொண்டோ போகப்போகிறாய்? — பேராசை, பெருநஷ்டம் — ஏழைக்கிரங்கு — இத்தனையையும் கேட்டுவிட்டு, இவைகளை உபதேசித்தவர்களை நோக்கித் தெண்டனிட்டுவிட்டு, அவர்கள் கேட்டால் குருபூஜைக்கு காணிக்கை—கோபூஜைக்குக் கைங்கரியம் என்று 'எதையாவது' தந்துவிட்டு, அத்துடன் தீர்ந்தது என்ற எண்ணத்துடன் பணம் தேடிவாழும் பரம்பரைதான் இன்னும் இருந்து வருகிறது. புதிய உபதேசங்கள் மூலம் புலிகளை பசுக்களாக்கும் விநோபா குழுவினர் இதை எண்ணிடவேண்டும். நாடு புண்ய சிலர்களால், உருப்பெற்றுவிடக் கூடிய நிலையில் இல்லை. அப்படி புண்யம் செய்பவர்களும் வியாபார நோக்குடன்தான் ஏதாவது செய்கிறார்களேயொழிய, கருணை மற்று அல்ல.

ஐந்தாறு தினங்களுக்கு முன்பு, ஆரூர் தியாகராஜ முதலியார், பூமிதானம் செய்ததை குறித்து, விளக்கமான செய்திகள் வந்தன. அந்தத் 'தானம்' செய்த அடுத்த மாதமே சொந்த நிலத்தில் கரும்பாலை கட்ட, அனுமதி கோரியிருக்கிறார், அவர்! தியாகி—வள்ளல்—தினதயாளர், என்போரின் செயல், இப்படியிருக்கிற காலத்தில், கள்ளிச்செடியிடம்போய் காமும் பசுவின் பாலை எதிர்பார்க்கலாமா? — அதனால்தான், 'பூமிதானம் என்பது ஓர் பொழுதுபோக்கு' எனக் கூறுகிறோம். ஆச்சார்ய விநோபாபாவே போன்றோரின் அறிவும் நேரமும், காற்றுக் கோட்டை கட்டிடும் வழிகளிலா பயன்படவேண்டும்?

★

★ இவர் மட்டுமல்ல! ★

சிருங்கேரி

மட-அதிபதி, அண்மையில்: ஆற்று வெள்ளத்துக்கு இரையாகி மாண்டதைப்பற்றி அவரது 'சிஷ்யகோடி'கள் பற்பல கதைகளைக் கூற ஆரம்பித்து விட்டனர்.

எங்கே அவரது 'மகாத்மியத்துக்கு' குறைவுவந்துவிடுமோ எனும் பயத்தில், ஆற்றுக்குப் போகுமுன்னரே, தான் சாகப் போவதாகச் சொல்லிச்சென்றதாகவும், அவர் செத்தபின், உடலுக்குள் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லாமலிருந்ததால், அவர் நீரில் மூழ்கி சாகவில்லையென்றும்—பலவாறாக, கயிறு கட்டுகின்றனர். உடலைப் பரிசோதித்த டாக்டரோ, அவர் 'மாரடைப்பால்' இறந்ததாகத் தெரிவித்துள்ளார். இவர் கதை இருக்கட்டும்—

ஆதிசங்கரர்

எப்படி இறந்தார்? அத்வைத சங்கராச்சாரியார் என்று அழைக்கப்படும் அவர்தான் சிருங்கேரியில் மடம் உண்டாக்கியவர். அவர் இமயமலையில் இறந்தார், எல்லோரும் கொண்டாடும் அவர், சாதாரணமாக அல்ல இறந்தது; மூல வியாதி கண்டு!!

திராவிடநாடு

காஞ்சி] 10—10—54 [ஞாயிறு

ஓடிடும் நதியில் ஆடிடும் நாணல்!

★

கேலி ஒலி என்ன, கித்தாப்புப் பேச்சென்ன, விழியுயர்வதென்ன, விட்டேனு பார்! என்பதென்ன — அடடா! அவர்களை நினைக்கும்போது வடமொழிக் கவிஞன் காளிதாசன் சொன்ன, 'ஓடிடும் நதியில் ஆடிடும் நாணல்', என்கிறவரியே கவனத்துக்கு வருகிறது.

மாவட்டக் கழகத் தேர்தல்களையொட்டி பல இடங்களுக்கும் சென்று 'பரிவாரங்களை'த் திரட்டிய காங்கிரஸ் அமைச்சர்களைப் பற்றிவரும் செய்திகள், பலப்பல. ஒருவர், வீடு வீடாகச் சென்று, வேண்டினாராம்—தென்ஆற்காட்டில்! இன்னொருவர், ஏதேதோ சொல்லிப் பவனிவந்தாராம், வேருேர் மாவட்டத்தில்!! ஒவ்வொருவரும் தத்தமது 'சக்தியானுசாரம்' காங்கிரசின் செல்வாக்கைக் காப்பாற்றச் சேவை புரிந்திருக்கின்றனர். அந்தச் சேவை தரப்போகும் 'பலன்கள்' கால ஓட்டத்தில் விளங்கும்.

நாம் கவனிக்க விரும்புவது, அவ்வண்ணம் பவனிவரச் சென்றோர் அனைவரும், தாம் வகிக்கும் மந்திரிப் பதவியின் மவுசை நிலை நாட்ட ஆங்காங்கும் முயற்சிப்பது குறித்துத்தான். இந்தப் பதவியில், யாராரோ இருந்தனர்! இன்று இருக்குமிடம் கூடத் தெரியவில்லை!! அதனை மறந்து, ஓடுவதும், ஆடுவதும், ஒய்யாரகீதம் பாடுவதுமாக இருக்கின்றனர்—இவர்கள். காமராஜரின் 'கரும்புள்ளி'களில், முதலிடம் வகிக்கும் சுப்ரமணியம், இன்னும் தமது, அதிகப்பிரசங்கத்தை விட்டபாடில்லை! செல்லுமிடந்தோறும் ஏதாவது சொல்லிவருகிறார்—அறிவியக்கத்தின் பணிகளைப்பற்றி. அவர் கூறுவது, நமக்குக் கால் தூசுபோல! யாராரோ முயன்றுபார்த்த பின்னரும், முகில்கிழித்து உலவும் முழுமதிபோல விளங்கும் அறிவொளிமுன், இவர் மிகச் சாதாரணம் — எதிர்ப்புப் பள்ளியின் சிறு குழந்தை—எனவே, அதைப் பற்றி நாம் சிறிதுகூடக் கவலைப்படவில்லை. ஆனால், அரசு செல்லும் பாதையே மாறியிருக்கிறது காமராஜர் வந்ததுமுதல், என்று மக்கள் எண்ணிக்கிடக்கின்றனரே — அதன், திரையை விலக்குவதுபோல, அன்பர் சுப்ரமணியம் பேசிவருகிருர்!

எங்கோயிருந்தவரை, அரசுத்தலைவராகும்படிச் செய்தது, ஆச்சாரியாரின் அட்டகாசம். 'புதிய கல்வித் திட்டம் ஒழித்தவரே, போற்றி!'—என்று கூட மக்கள் மன்றம் புகழ்மாலை சூட்டியது. அத்தகைய காமராஜரின் அமைச்சரவையில் இடம்வகிக்கும் சுப்ரமணியம், கூறிவருகிருர், திடமான குரலுடன், "புதியகல்வித்திட்டம் கைவிடப்படவில்லை. தற்காலிகமாக நிறுத்திவைத்திருக்கிறேம். சமயம் வரும்போது ஆலோசிப்போம்" எனும் கருத்துப்பட. தற்காலிகமாம்! கைவிடப்படவில்லையாம்!! ஒரு முறை, இருமுறையல்ல; இதோடு பன்முறை கூறிவிட்டார். அதுபற்றி: புதிய கல்வித் திட்டத்தை ஒழித்தவர் என மக்களால் பாராட்டப்படும் காமராஜர் சிறு வார்த்தையும் செப்பினாரில்லை! ஒரு மறுப்பும் சொன்னாரில்லை!! 'சகலம் மௌனமயம் ஜகத்' என்று காங்கிரசுக்கு புது வேட்டைகளைக் கொண்டுவருவதில், கவனம் செலுத்திவருகிருர்.

முதல்வரின் நிலை, அது. மற்றவர்களோ, தத்தமது 'கித்தாப்பு'க்கான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எல்லோருக்கும், கவனமூட்ட விரும்புகிறேம்! காலக் கடிகாரம், சாமான்யமானதல்ல. நேற்று சாதாரணமாகயிருந்த ராமசாமி, இன்று 'கனம்' பட்டியலில் வந்ததுபோல, நேற்று நாட்டையே அதிரச் செய்த ஆச்சாரியார் இன்று 'சாதாரணது' ஆனதுபோல, சகடக்கால் போல வரும் இந்தப் பதவிகள். இதையே சாசுவதமென எண்ணி, தமக்கு விசேஷ அந்தஸ்து ஏற்பட்டு விட்டதாக, மக்களை மறந்து வெளிச்சம் போட முனைவது—விபத்து! பெரும் விபத்து!! இப்படி ஆட்டம் போட்டு, இருந்த இடம் தெரியாமல் போனோர், ஏராளம். அதை எண்ணிடவேண்டும், அமைச்சர்களாயிருப்போர். அவர்கள் வந்து, "அது செய்வேன். இது செய்வேன். நான் மந்திரி" என்று சொல்லி பெருமை காட்டும் வேளையில், மக்களும் மயங்கிடக் கூடாது; இவர்களிருந்த இடத்தில் பலர் இருந்திருக்கின்றனர் என்பதை நினைவூட்ட வேண்டும். மாவட்டக் கழகத் தேர்தல்களில் பல இடங்களில், இத்தகைய 'மயக்கு' மொழிகள், ஏராளம் வீசப்பட்டிருக்கிறது! அதனுல்தான், எல்லோருக்கும் கவன மூட்டுகிறேம்—அது காமராஜராயிருந்தாலும் சரி, பக்தவத்சலமாயிருந்தாலுஞ்சரி, சுப்ரமணியமாயிருந்தாலும் சரி, யாராயிருந்தாலும் சரி-இன்று 'ஓடுகிற நதியில் ஆடிடும் நாணல்களே, தவிர, வேறில்லை! நதியில் நீர் ஓடுவதால் அதில் மிதக்கும் நாணலும் ஆடி ஆடி மகிழ்கிறது!! ஆற்றில், நீர், எப்போதும் சாசுவதமல்ல. கவனமிருக்கட்டும், 'கனம்'களுக்கு.

★

★ அந்தக் காரியம் ★

"உபரியாக உற்பத்தியாகும் செல்வம் ஒரு சிலர் கையில் குவியாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்"

•

தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கிறார்! ஒரு சிலர் கையில் குவியாமல்பார்த்துக்கொள்ளவேண்டுமாம்! அதுவும் உபரியாக உற்பத்தியாகும் செல்வம்!!

✻

"நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் உணவு, உறைவிடம், உடை வசதிகள், கல்வி இல்லாமல் இருக்கிறார்கள். இதை உற்பத்தி அதிகரிப்பின்மூலமே சாதிக்கமுடியும். ஆனால், நியாயமான செல்வ விநியோகமும் வேண்டும். உபரியாக உற்பத்தியாகும் செல்வம் ஒரு சிலர் கையில் குவியாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்"

✻

மக்கள் படும் வேதனையை, இவ்வளவு விளக்கமாக யாராலும் கூற முடியாது. வேதனையை மட்டுமா— அதை எப்படிப் போக்குவதென்றும் வழி சொல்கிறார்! அதிக உற்பத்தி செய்யவேண்டுமாம்!! அப்படி உற்பத்தி செய்துவிட்டால் போதுமா? ஆகவே, நியாயமான விநியோகமும் வேண்டும் என்கிறார். அதிகமாக உற்பத்தியாகும் செல்வம், ஒரு சிலர் கையில் தங்கிவிடக்கூடாதென்றும் தெரிவிக்கிறார்.

கம்யூனிஸ்டுத் தலைவரா, திமுக வீரரா, இவ்வண்ணம் கூறுவது? அல்ல. அல்ல! 'டில்லி' எனும் பெயர் கொண்ட கப்பலில் இருந்தபடி, தெரிவித்திருக்கிறார், டில்லி மகிபர், பண்டித நேரு.

நடுக்கடலில், ஞானோதயம் போலும்.

இவ்வளவையும் சொல்கிறாரே! இவர், யாருக்குச் சொல்கிறார்! ஆள்பவர், யாருக்கு அறிவுரை சொல்கிறார்?

இந்தக் காரியங்களைச் செய்ய, உலகத்திலே எந்தத் தலைவர்களுக்கும் இல்லாத வசதியிருக்கிறது, பண்டிதருக்கு. தலையாட்டக் கூடிய சகாக்கள்!—தட்டிப் பேச ஆளில்லாதுறை! போடும்குழு, இத்தனையும் வைத்துக் கொண்டு, 'உபரியாக உற்பத்தியாகும் செல்வம் ஒரு சிலர் கையில் குவியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்', என்றால், அந்தக் காரியத்தை யார் செய்ய வேண்டுமெனப் பண்டிதர், விரும்புகிறார்.

பதில் கிடைத்தால், அவரது விருப்பத்தை நிறைவேற்றும், பலருண்டு நாட்டில். தானிருக்கிற இடம், அவ்வண்ணம் செய்ய வசதி அளிக்கவில்லையென்றால், அதையாவது தெரிவித்துவிடட்டும் ஆள், ஏராளம் நாட்டில்! அதுவும், அந்தக் காரியத்தைக் கவனிக்க!! ★

★ சீனா செல்லும் பாதை ★

அக்டோபர் 1! சீனமக்கள் யாவரும் புது மனிதர்களாய் உலவினர்! அன்று சீனாவில்மட்டுமல்ல — ரஷ்ய மண்ணிலும், ஆனந்தம் தென்பட்டது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு! ஐந்து நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்ட செங்கொடி, பறக்கவிடப்பட்டது, சீனாவில்—பாராளும் சின்னமாக!! அந்தக் காட்சியைக் காண சீனமக்கள் நடத்திய அறப்போர், ஓராண்டு ஈராண்டு அல்ல; நூறு ஆண்டுகள்.

அதன் பிறகு பூத்தது, புதுச் சீனம்!

இன்று, அந்தச் சீனத்துடன் கை கோர்த்துலவ ஆசைப்படுகிறது, இந்தியா.

அகமகிழ்ச்சிக்குரியதே.

நேசம் பாராட்டுவதோடு நின்றிடாமல், அந்த மாபெரும் மக்கள் சமுதாயம் சென்றிடும் பாதையையும் பண்டிதர் குழாம் பயின்றால்?

பலருக்கு ஏற்படுகிறது, இந்த ஆசை!

காரணம், புது சீனம், ஐந்தரண்டுகளில் சாதித்துள்ள பட்டியலைப் படியுங்கள்.

"இராணுவ பலத்தின் உதவியால் சீனாவின் மீது அன்னிய ஏகாதிபத்திய அரசுகள் சுமத்தியிருந்த அநியாய ஒப்பந்தங்கள் யாவற்றையும் அயல் நாட்டினர்கள் அனுபவித்து வந்த விசேஷ உரிமைகள் சலுகைகள் யாவற்றையும் ரத்து செய்ததுடன், மத்திய மக்கள் சர்க்கார் சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் அன்னியர்கள் தலையிடும் அக்கிரமத்தையும் ஒழித்துக் கட்டியது.

"உழவனுக்கே நிலம்" என்னும் நியாயமான கோட்பாட்டைக் கம்யூனிஸ்ட் கட்சியும் சீன மக்கள் சர்க்காரும் வெற்றிகரமாய் நிலைநாட்டின 30 கோடிக்கு மேற்பட்ட நிலமற்ற விவசாயிகளும் சொற்ப நிலமுடைய விவசாயிகளும் தம் சொந்த சொத்தாக நாலரை கோடி ஹெக்டர் (பதினொன்னேகால் கோடி ஏக்கர்) நிலமும் மற்றும் விவசாயக் கருவிகளும் கால்நடைகளும் இலவசமாகப் பெற்றுக் கொண்டனர். நிலப்பிரபுக்களுக்கு வருடம் தோறும் 5 கோடி டன் கோதுமையின் பெறுமானமுள்ள நில வாடகை செலுத்தும் பெருஞ் சுமையிலிருந்து விவசாயிகள் விடுவிக்கப்பட்டனர்.

பழைய சீனாவில் விவசாயிகள் ஒரே சமயத்தில் 700-க்கு மேற்பட்ட பல்வேறு விதமான வரிகளும் தீர்வைகளும் செலுத்த வேண்டியிருந்தது. விவசாயிகளின்வருவாயில் 70லிருந்து 80 சத விகிதம்வரை இவ்வரிகளையும் தீர்வைகளையும் கட்டுவதற்கே சரியாய்ப் போய்விட்டது. இன்று சீன மக்கள் குடியரசில் விவசாயிகளிடமுள்ள நிலத்தின் அளவிற்கு ஏற்றபடி படிப்படியாக உயரும் முற்போக்கான, நியாயமான வரி விதிப்பு முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது; விவசாயக் குடித்தனங்களில் 10 சத விகிதமானவையிடமிருந்து — ஏழை விவசாயிகளின் குடும்பத்தினரிடமிருந்து—இன்று எவ்விதமான வரியும் வசூலிக்கப்படுவதில்லை.

விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சீன மக்கள் சர்க்கார் அக்கறையுடன் பாடுபடுகிறது. விவசாயிகளுக்கு அது இயந்திரங்களையும் தேர்ந்தெடுத்த உயர்ந்த விதைகளையும் உரங்களையும் கொடுத்து உதவுகிறது; நீர்ப்பாசன அமைப்புகளைக் கட்டுவதற்கு ஏராளமான பணம் செலவிடுகிறது. நீர்ப்பாசன வேலைகளுக்காக கோமின்டாங் சர்க்கார் எந்த வருடத்திலும் ஒதுக்கிய மிகவும் அதிகபட்சத் தொகையைக் காட்டிலும் 53 மடங்கு அதிகமான தொகையை சீன மக்கள் சர்க்கார் 1953ம் ஆண்டில் செலவிட்டது,

மக்கள் சர்க்காரிடமிருந்து பல வழிகளிலும் உதவிபெற்றுவரும் சீன விவசாயிகள் தானிய உற்பத்தியையும் இயந்திரத் தொழில்களுக்குத் தேவையான விவசாயப் பொருள்களின் உற்பத்தியையும் பெருக்கி வருகிறார்கள். யுத்த முற்கால ஆண்டுகளில் 1937ம் ஆண்டில் தான் மிகவும் அதிகமான தானியம் அறுவடை செய்யப்பட்டது. இதற்குள்ளாகவே, 1952லேயே, 1937-ம் ஆண்டையும்விடக் கூடுதலான தானியம் அறுவடை செய்யப்பட்டது,

சீன விவசாயிகளின் வாழ்க்கை நிலைமைகள் ஆண்டிற்காண்டு வளமடைந்து வருகின்றன- சென்ற காலத்தில் அவர்கள் அரைவயிறு சாப்பாட்டிற்கும் வழியின்றி கந்தலும் கிழிசலும் உடுத்தி மனிதர்கள் வாழ லாயக்கற்ற ஓட்டைக் குடிசைகளில் வாழ நேர்ந்தது. ஆனால் இன்று அவர்களிடம் தமக்குத் தேவையான உணவுமட்டுமின்றி வெளியே சந்தையில் விற்பனை செய்வதற்கும் போதுமான உணவுப் பொருள்கள் இருந்து வருகின்றன. விவசாயிகளுக்குக் கிடைத்துள்ள வளமிகுந்த வாழ்வின் காரணமாய் கிராமப்புறத்தில் இயந்திரத் தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டிருக்கிறது,

இயந்திரத் தொழில்களின் வளர்ச்சியிலும் இந்த இளங்குடியரசு மாபெரும் பல வெற்றிகள் பெற்றுள்ளது. ஜப்பானிய படையெடுப்பாளர்களும் கோமின்டாங் வெறியர்களும் சீனாவின் இயந்திரத் தொழில்கள், போக்குவரத்து சாதனங்கள் ஆகியவற்றின் பெரும் பகுதியை நாசம் செய்துவிட்டுச் சென்றனர். சீனதேசம் முழுமையும் ஆர்த்தெழுந்து தேசப் பொருளாதாரத்தைப் புனரமைக்கும் போராட்டத்தில் செயலாற்றியது. முன்பின் காணப்படாத வகையில், ஒரு குறுகிய காலத்திற்குள் — மூன்றே ஆண்டுகளில் — இயந்திரத் தொழிலும் போக்குவரத்தும் புனரமைப்பு செய்யப்பட்டதுமட்டுமல்லாமல், மேலும் அபிவிருத்தியும் செய்யப்பட்டன. இதன் விளைவாக இதுவரை பிற்பட்ட நிலையிலிருந்த ஒரு விவசாய நாட்டை இயந்தியத் தொழில் வளர்ச்சியுடைய ஒரு நாடாக மாற்றுவதென்னும் மாபெரும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதென்பது சாத்தியமாகியுள்ளது.

மிகச் சமீப காலம்வரை சீனாவிலிருந்த ஓரிரண்டு இயந்திரத் தொழில்களுங்கூட முழுக்க முழுக்க காலனி அடிமை முறையின் குணாதிசயத்தைப் பெற்றிருந்தன. இந்த குணாதிசயங்களில் ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். 1953-ம் ஆண்டில் கூட இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இன்ஜினியரிங் தொழில்களின் உற்பத்தி அளவு தேசத்தின் இயந்திரத் தொழில்கள்யாவும் சேர்ந்து உற்பத்தி செய்த பொருள்களில் ஒரு சதவிகிதம் தான் இருந்தது.

சக்தி வாய்ந்த தேசிய இயந்திரத் தொழில் அமைப்பைக் கட்டியமைக்கக் கூடிய வகையில் தேசத்தின் இயந்திரத் தொழில்களை வளர்ச்சி செய்யும் பொருட்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மத்திய மக்கள் சர்க்காரும் ஒரு ஐந்தாண்டு திட்டத்தை வகுத்தன. இந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு சோவியத் யூனியனும் மக்கள் ஜனநாயக நாடுகளும் சீனாவிற்கு தன்

னலமற்ற உதவிபுரிந்து வருகின்றன. ஐந்தாண்டு திட்ட காலத்தின் முதலாவது வருடமான சென்ற வருடத்தில் 130 மாபெரும் இயந்திரத் தொழில் நிலையங்களும் ரயில்பாதைகளும் முக்கிய ரஸ்தாக்களும் மற்றும் பலவும் கட்டத் தொடங்கப்பட்டன. இவற்றுள் பல இதற்குள் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன. மிகவும் சிக்கலான நுண்ணிய பல இயந்திரங்களை உற்பத்தி செய்யும் வழிமுறைகளில் சீனத் தொழில்கள் இதற்குள்ளாகவே பாண்டித்திய மடைந்துள்ளன. மக்களின் உடனடித் தேவைகளான வாழ்க்கைக்கு அவசியமான உபயோகப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கலாச்சாரம், கல்வி, உடலாரோக்கிய வசதிகள் ஆகியவற்றை வளர்ந்தோங்கச் செய்யும் வேலையிலும் சீன மக்கள் குடியரசு குறிப்பிடத்தக்க பல வெற்றிகளைச் சாதித்துள்ளது.

கல்வித் துறையில் அபிவிருத்தியடைவதற்கு சீனாவின் உழைப்பாளி மக்களுக்கு இன்று உண்மையிலேயே எல்லையற்ற சாத்தியானுகூலங்கள் கிடைத்துள்ளன. ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் உழைப்பாளி மக்களின் குழந்தைகள் தங்கு தடையின்றி சேர்ந்து கல்வி பயிலுவதற்கான வசதிகள் யாவும் இன்று கைகூடியுள்ளன. 1953ம் ஆண்டில் சீனாவின் ஆரம்பப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் 5 கோடியே 80 லட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் கல்வி பயின்றனர், பழைய சீனாவின் சரித்திரம் கண்டிருந்த மிகவும் அதிகபட்ச மாணவர்கள் எண்ணிக்கையைவிட இது 135 சதவிகிதம் அதிகமானதாகும். சீனக் குடியரசின் உயர்நிலைப் பள்ளிகளில் இன்று 2 லட்சத்து 20 ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்கள்—அதாவது விடுதலைக்கு முன்பிருந்ததைக் காட்டிலும் 70 சத விகிதத்திற்கு அதிகமான மாணவர்கள்—கல்வி பெறுகிறார்கள். பழைய சீனாவில் தமது அன்றாட வேலைகளில் மூழ்கியிருந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் தம் கல்வி வளர்ச்சியைப் பற்றி சிந்திக்கவும் முடியாத நிலையிலிருந்தனர். ஆனால் புதிய சீனாவில் சென்ற வருடம் 30 லட்சத்திற்கு மேலான தொழிலாளர்களும் இதர சிப்பந்திகளும் அவரவர் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில் கல்வியும் பயின்று தம் அறிவை வளர்ச்சி செய்துகொண்டனர். 1952-1953ம் ஆண்டின் மாரிக் காலத்தில் 4 கோடியே 20 லட்சம் விவசாயிகள் பள்ளிக்கூடம் சென்று பாடம் பயின்றனர்.

அரசியல், பொருளாதார, கலாச்சார வளர்ச்சித் துறைகளில் மக்கள் சீனா கண்டுள்ள சாதனைகள் பலவும் மக்கள் ஜனநாயக அமைப்பின் உறுதிக்கும் மகத்தான சீனக் குடியரசின் ஓங்கி வளர்ந்து வரும் வலிமைக்கும் தக்க சான்றுகளாக விளங்குகின்றன. குடியரசின் புதிய அரசியல் அமைப்பை நிர்ணயிக்கப்போகும் அகில சீன மக்கள் காங்கிரசிற்கு தேர்தல்கள் பரந்த இந்நாடெங்கும் நடந்து இப்பொழுது தான் முடிவுற்றுள்ளன. சீன மக்களின் சகல வட்டங்களைச் சேர்ந்த பிரிவினரும் அரசாங்க நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்வதற்கு புதிய அரசியல் அமைப்புத் திட்டம் உத்திரவாத மளிக்கிறது; வேலை செய்யவும் கல்வி பெறவும் ஓய்வெடுத்துக்கொள்ளவும் சகல பிரஜைகளும் உரிமையுடையவர்களென்பதை அது பிரகடனம் செய்கிறது. இவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கான உத்திரவாதங்களையும் ஏற்படுத்துகிறது.

சீன மக்கள் குடியரசு ஒரு வல்லரசு ஆகும். ஜீவாதாரமான சர்வதேசப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் அது தனக்கு உரித்தான முக்கிய பங்கை ஆற்றி வருகிறது. சீன மக்கள் குடியரசு ஆற்றிவரும் பணி உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும் இந்தோ-சீனாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஜினீவா மகாநாட்டில் சீன மக்கள் குடியரசின் பிரதிநிதிகள் ஆற்றிய மாபெரும் சேவை சீனாவின் முக்கியத்துவத்தைக் கண்கூடாகக் காட்டியுள்ளது.''

மக்களை விரட்டவில்லை — மாறாக, அவர்கள் மனதிலெல்லாம் ஒரு புத்துணர்ச்சியை உண்டாகியிருக்கின்றனர்.

இங்கும்தான், காங்கிரேஸும்—'புத்துணர்ச்சிவேண்டும்' எனத் தலைவர்கள் பேசுவதை.

உணர்ச்சி, எங்கே, அரும்புகிறது? —இருப்பதும் அழிந்துவருகிறது!

என்ன காரணம்?

பாதை—முதலாளித்துவப் பாதை.

சீனா செல்லும் பாதை — பொதுவுடைமைப் பாதை.

சீனப் பாதை, மனிதர்களை வாழ்விக்கும் பாதை.

அதனால்தான், உணர்ச்சி மலருகிறது. அங்கே! மடிந்துவருகிறது, இங்கே!! ★

குறள் நெறி விழா

நுங்கம்பாக்கத்தில் அக்டோபர் திங்கள் 3-8 நாட்களில் நடைபெற இருந்த குறள் நெறி விழாவினை 23, 24, 25, 26, 27 நாட்களில் சிறப்புற நடத்த முடிவு செய்துள்ளோம். முதல் நாளன்று காலை மாபெரும் ஊர்வலமொன்றுக்கும், நாடோறும் தென்னாட்டுத் தமிழ்ப் பெரும் புலவர்கள், மக்கள் தலைவர்கள் ஆகியோரின் சொற்பொழிவுகளுக்கும், மாலை இன்னிசை அரங்குகட்கும், இரவு T. S. மணிவண்ணன் குழுவினர் அளிக்கும் ஓரங்க நாடகங்களுக்கும், இறுதிநாளில் பெரு நாடகமொன்றுக்கும், ஏற்பாடு செய்துள்ளோம்.

விழாவினைத் துவக்கிவைக்க மாநில முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருவாளர்கள்:-

ரா. பி. சேதுப்பிள்ளை. வித்வான் T.P.மீனாட்சிசுந்தரனார், டாக்டர் அ. சிதம்பரனார், வித்வான் ஜி. சுப்பிரமணியம் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், S. ஆறுமுக முதலியார், அரசங்கண்ணனார், க. அன்பழகன், புலவர் அன்பு கணபதி, புலவர் நன்னன், T. K. நாகம்மாள், P. R. மீனாட்சிசுந்தரம், ரம்போலா மஸ்கரநாஸ், புலவர் உலக ஊழியர், லயனம், P.B. ராஜேஸ்வரியும், K. A. P. விஸ்வநாதம், பன்மொழிப் புலவர் அப்பாதுரை, கஜபதிநாயகர், திருக்குறளார் வி. முனிசாமி, குஞ்சிதம் அம்மையார், இரா. நெடுஞ்செழியன், சி. என் அண்ணாதுரை ஆகியோரையும், கண்ணதாசன், சுரதா, N.S, கிருஷ்ணன், T. K. சண்முகம், K. R. ராமசாமி, M. M. தண்டபாணிதேசிகர், M. M. முத்து A. D. சுல்தான், நாதசுர வித்வான் கதிர்வேலு, கௌசல்யா, S. S. சிவசூரியன், நீதிபதி சோமசுந்தரம், கல்வித்துறைத் துணைத் தலைவர் N. D. சுந்தரவடிவேல், உதவிமேயர் T. வேணுகோபால்ராவ், நகரசபை ஆணையாளர் V. N. சுப்பராயன், உதவி ஆணையாளர் N. சங்கரன், C. அமிர்தகணேசனார், தமிழ்மணி வேலாயுதம் பிள்ளை, சண்டே அப்சர்வர் ஆசிரியர் P. பாலசுப்ரமணியம், P. R. கோகுல கிருஷ்ணன், டாக்டர் தர்மாம்பாள், தாமரைக் கண்ணி அம்மையார் ஆகியோரையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எங்களது இப்பெரு முயற்சி வெற்றியுற்றுச் சிறக்க தங்களது நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் தந்துதவ வேண்டுகிறோம்.

--விழாக் குழுவினர்.

★

யாரை நோவது?

[தினதயாளன் பிரஸ் — உரிமையாளர், என் நண்பர். அவரது அச்சகத்துக்குச் சென்ற நான், அவர் வைத்திருக்கும் 'பைலை'ப் புரட்ட நேர்ந்தது. யார்யாருக்கு, எப்படி எப்படி 'நோட்டீஸ்' அடித்துக் கொடுத்தோம் என்பதற்காக அவர் வைத்திருக்கும் 'பைல்' அது. புரட்டிப் பார்த்தேன்! அங்கு கிடைத்த சில, 'பிட்நோட்டீஸ்'கள்!! அவைகளைப் போட்டவரும், எழுதிக் கொடுத்தவரும், ஒரே ஆள்தான். அச்சு இயந்திரம் என்ன செய்யும்? பேச்சு இயந்திரங்களாக இருக்கும் மனிதர்களே, இப்படியெல்லாம் செய்யும்போது!! அந்த 'பிட்நோட்டீசு'களை உங்கள் பார்வைக்கும், வைக்கிறேன் — பெரிய ஏடுகள் தரும் விளக்கத்தைவிட, இந்த நோட்டீசுகள் நல்ல உண்மையைத் தரும் என்பதால்!]

அழியட்டும் ஆதிக்கம்! ஒழியட்டும் மஞ்சளாட்சி!!

பொது மக்களே,

வணக்கம். நாடு, காடாகி வருகிறது. காங்கிரஸ் ஆட்சியில், பிணமலைகளும், உயிர்ச்சாவுகளும்தான் பெற்றோம். இனிமேலும், இந்தக் காங்கிரசை நீடிக்கவிடலாமா? சேலம் ஜெயிலிலே, 22-பேரைச் சுட்டுக் கொன்ற இந்த பாசிச வெறியர்களை அரசியலில் விட்டுவைக்கலாமா? தாலியறுத்த கட்சி — தகாத கட்சி — இதற்கு வரப்போகும் பொதுத் தேர்தலில் சரியான பாடம் புகட்ட, விவசாயிகளே! தொழிலாளர்களே! மாணவர்களே! தாய்மார்களே! தயாராக இருங்கள்! தயாராகுங்கள்!!

ஒழிப்போம், காங்கிரசை!

அழிப்போம், அட்டூழியத்தை!!

இங்ஙனம்,

பெத்தான்

பொது நல விடுதலை ஊழியன்.

'தினதயாளன் பிரஸ்'

படிகள் 5000, 1950

பொது மக்களே! உங்கள் தீர்ப்பு எங்கே?

நமது நகரில், என் வாழ்நாளில் நான் செய்துள்ள சேவைகளை, நீங்கள் அறிவீர்கள். அதைவிட முக்கியமான சேவையைச் செய்ய வேண்டியவனாகிவிட்டேன். காங்கிரசின் சார்பில் கடிகாசலம் நிற்கிறாராம், எம். எல். ஏ. தொகுதிக்கு! காங்கிரசை வாழவிடுவதா? அதுவும், நம் கண் முன்பா? அதனால், நான் அவரைப் போட்டியிட்டு, தோற்கடிக்க முடிவுசெய்துவிட்டேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மக்களே! தாய்மார்களே! மாணவர்களே! விவசாயிகளே! காளைகளே! உங்கள் தீர்ப்பு யார் பக்கம்?

இங்ஙனம்,

பொதுநல ஊழியன்

பெத்தான்

'தினதயாளன்' பிரஸ்

5000-படிகள் 1950

வெற்றி! வெற்றி!!

காங்கிரஸ் தோல்வி

எல்லோருக்கும் நன்றி

—பெத்தான்

'தினதயாளன்' பிரஸ்

5000 படிகள்-1950

ஒரு விளக்கம்

நான், காங்கிரசில் சேர்ந்துவிட்டதாகவும், கதர் கட்டிக்கொள்ள ஆரம்பித்துவிட்டதாகவும், ஊரிலே சிலர் வதந்திகளைக் கிளப்பி வருவதை நம்பவேண்டாம் என பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் எம். எல். ஏ. என்பதால், அடிக்கடி பல காங்கிரஸ் மந்திரிகள் வருவதைக் கொண்டு நான் காங்கிரசில் சேர்ந்ததாகக் கூறுவது மிகவும் மட்டரகமானதாகும் எனக் கண்டிக்கிறேன்.

இங்ஙனம்:

பெத்தான் M L. A.

'தினதயாளன் பிரஸ்'

3000 படிகள்-1952

எச்சரிக்கை

" சில காலிகள், என்னைப்பற்றி தவறாகப் பேசி வருகின்றனர். ஏதோ 'பெர்மிட்' விஷயமாக, நான் காங்கிரஸ்காரர்களுக்கு ஆதரவு தருவதாகக் கூறி வருகிறார்கள். அவர்களை கடுமையாக எச்சரிக்கிறேன். வீணாகக் கோபத்தைக் கிளறவேண்டாம்.

பெத்தான் எம். எல். ஏ.

'தினதயாளன்' பிரஸ்

3000 படிகள்-1953

வருகிறது ஜி.போ. தேர்தல்

என்னுடைய முடிவு

அன்பார்ந்த மக்களே!

நமஸ்காரம்.

வருகிற ஜில்லா போர்டு தேர்தலில் நின்று, உங்களது ஆசியின் பேரில், வெற்றிபெற உத்தேசித்திருக்கிறேன். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக நகர காங்கிரஸ்காரர்களும் முன் வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு

பெத்தான் M. L. A.

'தினதயாளன்' பிரஸ்

2000 படிகள்-1954

ஜேஹிந்த்! நேருஜிக்கு ஜே!!

மாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள்!

நாட்டுக்கு மிகவும் தேவையான கட்சி காங்கிரஸ் என்கிற படியால், அதிலே நான் சேர்ந்துவிட்டேன் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்வதோடு, வருகிற ஜில்லாபோர்டு எலெக்ஷனில் மாட்டுப் பெட்டியில் ஓட்டுப்போட்டு ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

தேசசேவகர்,
டவுன்பாங்கு மெம்பர்
பெத்தான் எம். எல். ஏ.

தினதயாளன் பிரஸ்
1000-படிகள்—1954

[இப்போது சொல்லுங்கள்! யாரைக் குற்றம் கூறுவது? என்னய்யா, இப்படியெல்லாம் 'நோட்டீஸ்' போடுகிறீரே!—என்று, அச்சக உரிமையாளரைக் கேட்டால், 'எனக்கென்ன தோழர்! பிசினஸ்!!' என்பார். உண்மைதான் — அவருக்கு இப்படியெல்லாம் நோட்டீஸ் போட்டால்தான் 'பிசினஸ்' ஓடும்! எனவே, அவரைக் குறைகூற முடியாது. எழுத்துக்களை அச்சடிக்கும் இயந்திரத்தையும் குறைகூற முடியாது!! பின் யாரை நொந்துகொள்வது? பெத்தான்களைப் பெருகச் செய்யும் நாட்டையும், அந்த நாட்டில் வாழும் கேட்டுக்கு ஆளான நம்மையும்தான் நாம் நொந்து கொள்ளவேண்டும்!!]

★

இலங்கை தி. மு. க.

26-9-54 கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை தி. மு. க. சிறப்புக் கூட்டத்தில் தோழர் அதி. இரா. மணி பொதுச் செயலாளராகவும், தோழர்கள் கே. எஸ். எம். கலாநேசன், இரா. மணவழகன் ஆகியோர் துணைச்செயலாளராகவும், தோழர் எஸ். கே. முகையதீன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

['சுதந்திரன்']

நன்றி அறிவிப்பு

நெல்லை மாவட்ட 2-வது தி. மு. க. மாநாடு வெற்றிகரமாக நடைபெற உதவிய நன்கொடையாளர்கள், தலைவர்கள், பேச்சாளர்கள், நடிகர்கள், தொண்டர்கள், கழக வீரர்கள், நண்பர்கள் மற்றும் பல வித அசௌகரியங்களுக்கிடையில் அமைதியாக இருந்து ஆதரித்த பொதுமக்கள் யாவருக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

குறிப்பு:- மாநாடு வரவு செலவு கணக்குகளை நான் மத்திய கழகத்திற்கு அனுப்பவேண்டியிருப்பதால் மாநாடு சம்பந்தமான நன்கொடை புத்தகங்கள் வைத்திருப்பவர்களும் இதர வரவு செலவு கணக்கு விபரங்கள் வைத்திருப்பவர்களும் கணக்குகளையும் நன்கொடை புத்தகங்களையும் உடனே என் விலாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம். வி. சூரியநாதன்
பொருளாளர்
34. பிரதவீதி, திருநெல்வேலி

★

உண்மை, இது!

"எனக்கு, அதுதானே வேலை? ஆகாய விமானங்கள் வரும், போகும்! உம்மைப் பார்த்தால் படித்த மனிதராகத் தென்படுகிறதே. இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்க வேண்டுமா? அனுமதிச் சீட்டு இல்லாமல், அன்னிய நாட்டுக்குப் போகமுடியாதே!—இது தெரிந்திருக்கவேண்டாம். இந்தியாவிலிருந்து வரும் உங்களைப் போன்றோர்க்கு, அனுமதிச் சீட்டும் விமான டிக்கெட்டும் வாங்கிக் கொடுக்கும் 'ஏஜன்சி'யா—எங்கள் தூதராலயம்?" என்று என்னை, ஏசினார், அவர்! கடுமையாகப் பேசினார்!! நான் இருப்பதோ, பல்கேரியாவில் — அங்கிருந்து ஸ்விட்சர்லாந்துக்குச் செல்ல விரும்பினேன். ஸ்விட்சர்லாந்தில் அப்போது நடைபெற்ற உலக சமாதானக் கவுன்சிலில் கலந்துகொள்ள, பல்கேரியத் தோழர்கள் அழைத்திருந்தனர். அங்கு செல்ல, எனக்கு அனுமதிச் சீட்டு வேண்டும். அதை, இந்தியத் தூதராலயம்தான் வாங்கித் தர வேண்டும். ஆனால், அது, தன் பிரதிநிதிமூலம் மேற்கண்ட பதிலைச் சொல்லியது. விமான தளத்திலிருந்து பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள், தத்தமது தூதராலயங்களின் உதவியால் அனுமதிச் சீட்டைப் பெற்றனர்! நானோ இண்டாடி திகைக்க நேர்ந்தது!!"

✶

"வெளிநாடுகளில் இந்திய தூதராலயங்கள்" என்னும் தலைப்பில் 3ந்தேதிய 'இந்து' ஏட்டில் கடிதம் ஒன்று தீட்டியிருக்கிறார், டாக்டர் ஜே. சி. குமரப்பா. காந்தியாரின் சீடர், பழைய தியாகி, அதே குமரப்பாதான். அவரை, அந்நிய நாட்டில் வந்திருக்கிறாரே என்கிற அனுதாபம் கூட இன்றி, ஏசினராம்—பேசினராம்! அப்படியிருக்கிறது வெளிநாட்டுத் தூதுவர் ஆலயங்கள்! ஆனால், பார்லிமெண்டில் பேசிய பண்டிதரோ, வானளாவப் புகழ்கிறார்—போற்றுகிறார்!!

—"செல்வநம்பி"

★

[15-பக்கத் தொடர்ச்சி]

மூலமும் ஒரே நேரத்தில் 'வணக்கம்' என்று கூறிய வண்ணம் பாஸ்கரின் அருகில் வந்தனர்.

புஷ்பாவோ உள்ளே நுழைந்தவுடன் நல்லமுத்துவைத்தான் பார்த்தாள். அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். உலகத்தின் பொறுப்பு அத்தனையையும் அள்ளிக்கொட்டியது அந்த பார்வை.

உள்ளே நுழைந்த பாஸ்கர் ஆதிமூலத்தைப் பார்த்து, "ஏதாவது கூறினேறா? யார்செய்த வேலையாம் இது?" என்றார்.

ஆதிமூலம் கையைப் பிசைந்தார். கிருஷ்ணசாமி முன்வந்து, "இப்பொழுதுதான் அவன் பேசவே ஆரம்பித்திருக்கிறான். அதற்குள் அவனுக்கு ஒரு அட்வகேட் கூட கிடைத்திருக்கிறார்!" என்று கிண்டல் மொழி பேசிய வண்ணம் நெடுமாறன் பக்கம் திரும்பினார்!

நெடுமாறன் பாஸ்கருக்கும் புஷ்பாவுக்கும் தலைகுனிந்து தன் வணக்கத்தைத் தெரிவித்தவண்ணம், "ஆறுமுகத்திற்காக வாதிட நான் ஒத்துக்கொண்டிருக்கிறேன்!" என்றார்.

(தொடரும்)

22. வழக்கறிஞர்களுக்கிடையில் ஆறுமுகம்

"உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கூறிக்கொண்டே அவனருகில் வந்து உட்கார்ந்தான் நல்லமுத்து.

ஆறுமுகம் திடுக்கிட்டுப் போனான். இந்த இடத்திலே நல்லமுத்துவுக்கு என்ன வேலை? ஒருவேளை தான் சாட்டிய பழிக்குப் பழி வாங்க வந்திருக்கிறானா? தான் தூக்குமரம் ஏறப்போவதைக்கண்டு கேலிசெய்துபோக வந்திருக்கிறானா?

எப்படியிருந்தாலும் இந்த இடத்திலே நல்லமுத்து தன்னை எதுவும் செய்ய முடியாது. அவனுடைய ஆத்திரத்தையெல்லாம் வாய்ச் சொல்லிலேதானே வைத்துக் கொள்ள முடியும்!

ஆகவே, நிதானமாக நல்லமுத்துவை நிமிர்ந்து பார்த்தான். அவனோ, ஆறுமுகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் முகத்திலே பழிவாங்கும் உணர்ச்சி எதுவும்தென்படவில்லை. அன்புடன் அவனைப்பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். பழிவாங்கும் எண்ணமில்லாமலிருந்தால், நல்லமுத்து அங்குவரக் காரணம் என்னவென்று ஆறுமுகத்திற்குப் புரியவில்லை. ஏதாவது பேச ஆறுமுகம் நினைத்தான். ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை. நாக்கு நடுங்கிற்று. மிகவும் கஷ்டப்பட்டு, "சார்.........!" என்று ஒரு வார்த்தையை வெளியேற்றினான். சட்டென்று நல்லமுத்து குறுக்கிட்டான்.

"வேண்டாம், ஆறுமுகம். மறுபடியும் என்னை "ஸார்!" என்று அழைக்காதே! நான் உனக்கு எப்போதும் அண்ணன்தான்!" என்றான், நல்லமுத்து.

கோடைக்காலத்து ஆற்று மணலில் குளிர் நீரைக் கொட்டிய மாதிரி மாளிகை வாசிகளின் கொடூரத்திற்கிடையே புண்பட்டுக் கிடந்த ஆறுமுகத்தின் மனதில் பால்வார்த்தன இந்த வார்த்தைகள். நல்லமுத்துவை நன்றியோடு நிமிர்ந்து பார்த்தான். கம்மிய குரலில், இன்னும் பாசத்தோடு பேச ஆரம்பித்தான் நல்லமுத்து.

"ஆறுமுகம்! உன்னிடம் என்னென்ன பேசவேண்டுமென்று நினைத்து இங்கு வந்தேனோ அவ்வளவையும் இப்பொழுது என்னால் பேசமுடியாது என்று எண்ணுகிறேன். இருந்தாலும் எனக்குத் தோன்றியதைக் கூறுகிறேன், கேள். நேற்று உன்னைக் கைது செய்தார்கள் என்றவுடனேயே எனக்குத் தூக்கம் போய்விட்டது. சென்ற வாரம் என்னையே இந்தக் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கப் பார்த்தனர்! இப்பொழுது உன்னை ஆளாக்கிவிட்டனர். என்ன நடந்தது, யார் இதற்குப் பொறுப்பாளி, யார் இதற்கு காரணகர்த்தா என்பதெல்லாம் எனக்கு இன்னும் சரியாக விளங்கவில்லை.

இதைப்பற்றிய முழுவிபரமும் உன்னிடம் நான் கேட்டுத்தானாக வேண்டும்.

என்னையும், என்போல் மேல் வகுப்பைச் சேர்ந்தவர்களையும் உனக்குப் பிடிக்கவில்லை என்பதை நான் உணர்கிறேன். ஆனால் உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதெல்லாம் அப்படிப்பட்ட உயர் வகுப்பைச் சேர்ந்தவனல்ல நான் என்பதை நீ நன்றாக உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதுதான். உயர் வகுப்பில் பிறந்தவனே ஒழிய மாளிகை வாசிகளால் மண் குடிசைக்காரர்களுக்கு ஏற்படும் இன்னலையும், ஏமாற்றத்தையும் உலகுக்கு எடுத்துக்கூறி, சேரி வாழ்வோருக்கு பூரண இன்ப வாழ்க்கையை தேடிக்கொடுப்பதில் தான் என் நாட்கள் செலவிடப்படுகின்றன. என் வாழ்க்கை, இல்லாதவரை உள்ளவராகவும், உள்ளவரை இல்லாதவரின் இரத்தத்தை உறிஞ்சும் உலுத்தர் நிலையிலிருந்து மாற்றவும்தான் பயன்படும். ஆகவேதான் உன்னுடைய நிலை எனக்கு அதிக கவலையைத் தருகிறது. இதுபற்றி என்னை நீ நம்பவேண்டும். நம்பி என்னிடம் இந்தவழக்கை ஒப்படைக்கவேண்டும். உனக்காக நானே வாதாட நினைத்தேன். ஆனால் சட்ட சம்பிரதாயங்கள் குறுக்கே நிற்கின்றன. ஆகவே எனது தோழர் நெடுமாறன் அவர்களை அழைத்து வந்திருக்கிறேன். சென்னையிலே மிகப் பிரசித்தி பெற்ற சட்ட நிபுணர் அவர். அவருடைய உதவியால் உனக்கு, ஏதாவது சாதகம் ஏற்படலாம். அவரைச் சந்திக்க உனக்கு விருப்பமா?" என்று மெதுவான குரலில் பேசினாலும் விரைவாய் பேசி முடித்தான் நல்லமுத்து.

அப்படியே அவனைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான், ஆறுமுகம். தன்னால் பெரும் பழிக்கு ஆளான நல்லமுத்து, தன் மேல் இவ்வளவு அக்கரை எடுத்துக்கொள்வதைக் கண்டு வியப்படைந்ததைவிட, சரியாக மாட்டிக்கொண்ட தன்னை, எந்த வழியில் காப்பாற்ற நினைக்கிறான் அவன் என்றே ஆறுமுகத்திற்குப் புலப்படவில்லை. அதே நேரத்தில் இவ்வளவு நல்லவனான நல்லமுத்துவின் மீதே தான் பழி சுமத்தினோமே என்று நினைத்தபொழுது, அவமான உணர்ச்சி தோன்றியது. தான் செய்த பெருந் தவறுக்கு

என்ன சமாதானம் கூறுவது என்று புலப்படவில்லை.

"நான் சரியாகப் பிடிபட்டிருக்கிறேன். என்னை இப்படியே விட்டுவிடுங்கள்!" என்று கூறும்போதே அழுதுவிட்டான், ஆறுமுகம்.

"சேச்சே! ஏன் அழுகிறாய், ஆறுமுகம்; நீ சரியாக அகப்பட்டுக்கொண்டதால்தான், இவ்வளவு பெரிய வழக்கறிஞரை அழைத்து வந்திருக்கிறேன். இதோ பார், ஆறுமுகம்! அவரிடம் நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறு. அவரால் உனக்கு நன்மை ஏற்படும். இனி கண்ணீர் விடுவதில் பயனில்லை!" என்று கூறிக்கொண்டே எழுந்து வெளியே போனான், நல்லமுத்து.

திரும்ப சில இடங்களில் அட்வகேட் நெடுமாறன் அவர்களை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான்.

ஆறடி உயரமும், அகன்ற மார்பும், நீண்ட மூக்கும் நெடுமாறனின் உடல்வலிமையை நன்கு எடுத்துக் காட்டின. அவருடைய கூரிய கண்கள் ஆறுமுகத்தை அப்படியே திகைக்கவைத்துவிட்டன.

"ஆறுமுகம்! இவர்தான் என் நண்பர்; உனக்கும் தோழர்தான் நெடுமாறன்!!" என்று ஆறுமுகத்திற்கு அவரை அறிமுகப்படுத்தினான், நல்லமுத்து.

ஆறுமுகம் பேசாமல் எழுந்து தலையைக் குனிந்து தன் வணக்கத்தைத் தெரிவித்தான்.

"உட்கார், ஆறுமுகம்!" என்று கூறிக்கொண்டே அவர் அவனெதிரில் அமர்ந்தார். ஆறுமுகமும் அமர்ந்தான். பக்கத்திலே நல்லமுத்துவும் உட்கார்ந்துகொண்டான். முதல் சில நிமிஷங்கள் நிர்மதியாக இருந்தன. ஆறுமுகத்திற்கு என்ன பேசுவது, எதைச் சொல்வது, எதை மறைப்பது என்றே புரியவில்லை.

நெடுமாறனே இந்த நிசப்தத்தைக் கலைத்தார்.

"ஆறுமுகம்! உன் சார்பாக நாங்கள் வழக்காடத் தீர்மானித்திருக்கிறோம். 'நாங்கள்' என்றால், சேரி வாழ்வோருக்காக நீதிமன்றம் ஏற முடிவு செய்திருக்கும் முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள்! உனக்கு சம்மதமானால், உன்னுடைய சார்பில் நான் வாதாடுகிறேன்" என்றார், நெடுமாறன்,

"எனக்காக வாதாட வக்கில் வைக்குமளவு என்னிடம் பணமில்லையே!" என்று முணகினான், ஆறுமுகம்.

"பணம் தேவையில்லை ஆறுமுகம்! உன் சம்மதம்தான் தேவை" என்று சட்டென்று கூறினார் நெடுமாறன்.

"வேண்டாம், ஐயோ, வேண்டாம்! எனக்காக நீங்கள் வாதாடவேண்டியது என்ன இருக்கிறது? எனக்குத் தூக்குமரம் முன்பே தயார் செய்துவிட்டனர். இனிமேல் நீங்கள் வேறு ஏன் நேரத்தைச் செலவிடுகிறீர்கள்!"

"இல்லை. எங்கள் நேரம் உனக்காகஒதுக்கப்பட்டதுதான். அதைப் பற்றிய கவலை எங்களுக்கிருக்கட்டும், ஆறுமுகம். இப்பொழுது உன்னுடைய உடல் நிலை எப்படி இருக்கிறது. இரண்டு நாட்களாய் நீ சாப்பிடவில்லை என்றார்கள். உன்னை அடித்துத் துன்புறுத்தினார்களா?"

"இல்லை......எனக்கு உடல் நலமில்லை; சாப்பாடே பிடிக்கவில்லை," என்று இழுத்தான் ஆறுமுகம்.

"பரவாயில்லை. டாக்டரை வரவழைக்கலாம். இப்பொழுது கூறு; உன் சார்பாக நான் வாதாடலாமா? என்னை நம்பி இந்த வழக்கை ஒப்புவிக்கிறாயா?" என்று மறுபடியும் கேட்டார் நெடுமாறன்.

ஆறுமுகம் பேசாமல் உட்கார்ந்திருந்தான். தன்னுடைய வழக்கில் இவர்கள் வந்து கூறப்போவது என்னவாயிருக்கும் என்றே அவனுக்குப் புரியவில்லை.

நெடுமாறன் தன் பையிலிருந்து சிகெரெட் பெட்டியை எடுத்தார், அதை அவன் முன் நீட்டிய வண்ணமே, "ஒரு சிகெரெட் குடி ஆறுமுகம். நாளை காலை உன்னை மத்திய சிறைக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே வந்து சந்திக்கிறேன். அதுவரை யார் உன்னை எது கேட்டாலும் நீ ஒரு பதிலும் கூற வேண்டாம். என்னைச் சந்தித்தபிறகே சொல்வேன் என்று கூறி அனுப்பிவிடு!" என்றார்.

ஆறுமுகம்சிகெரெட்டைஎடுத்து பற்ற வைத்தான். நல்லமுத்து அவன் முதுகைத் தட்டி "என்னப்பா, அட்வகேட் கூறுவது புரியுதா? யாராவது மிரட்டினா, எதையாவது உளறிவைக்காதே, மறுபடியும்" என்று கூறிச் சிரித்தான்.

ஆறுமுகத்திற்கு சுரீர் என்று தைத்தன அந்த வார்த்தைகள்,

"ஐயோ, அண்ணே! இனியும் அந்தத்தவறை செய்வேனா? தெரியாத்தனமா செய்ததவறை மன்னிக்கணும், அண்ணே! நீ சொல்றதையெல்லாம் கேட்கிறேன். நான்செய்த பாவத்தை மன்னிச்சுடுங்கோ!" என்றுகூறிக்கொண்டே கண்களில் கலங்கிய நீரைத் துடைத்துக் கொண்டான் ஆறுமுகம்.

"சேச்சே! பைத்யமாயிருக்கியே! நீ செய்ததையெல்லாம் நினைத்துக் குரோதம் கொள்கிறவனாயிருந்தால், இங்கே வந்திருப்பேனா?" என்று ஆறுமுகத்தின் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான் நல்லமுத்து.

"தைரியமாக, இரு, ஆறுமுகம்!" என்று கூறிக்கொண்டே எழுந்தார் நெடுமாறன்.

இதற்குள் வேறு யாரோ அந்த அறைக்குள் வரும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

அதே அறைக்குள் இன்ஸ்பெக்டர் ஆதிமூலமும், சர்க்கார்வழக்கறிஞர் கிருஷ்ணசாமியும் வந்து கொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்டதும் அனைவரும் எழுந்து நின்றனர். நெடுமாறனைக் கண்டதும் அரசாங்க வக்கில் கிருஷ்ணசாமி, "ஓ! மிஸ்டர் நெடுமாறன்! நீங்க கூட........."என்று ஆரம்பித்தார். அதற்குள் நெடுமாறன், "இந்த பையன் சார்பாக நான் வாதாட அமர்த்தப்பட்டிருக்கிறேன்!" என்றார்.

"அப்படியா...?" என்று வெறுப்போடு தன் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார், கிருஷ்ணசாமி.

அவரைப் பின் தொடர்ந்து ஆதிமூலம், "ஆறுமுகம்தான்செய்த குற்றத்தை அவனே ஒத்துக்கொள்ளும்போது........" என்று இழுத்தார்.

"இல்லை. ஆறுமுகம் வாக்குமூலம் எதையும் இப்பொழுது கொடுக்கப் போவதில்லை!" என்றார் அழுத்தமாக.

இந்த வார்த்தைகள் கிருஷ்ணசாமியின் மூஞ்சியையே மாற்றிவிட்டது.

"இந்த வழக்கை வளர்த்தி, பெரிதாக்குவதில் உமக்கு என்னலாபம். இந்த கொலைகாரர்களை பாதுகாப்பதில் ஏன் இவ்வளவு அக்கரை, உமக்கு!" என்றார் கோபமாக.

"இந்த மாதிரி ஆறுமுகங்களை தூக்கு மரம் ஏறச் செய்தால்தான்,

எங்கள் போன்றோர்மீது தேர்தல் காலத்திலே பழிசுமத்தலாம் என்ற ஆசை உங்களுக்கு, இல்லையேல், உங்களுக்கு ஏன், இப்படிக் கோபம் வருகிறது?”

“ஆமாம்! தேர்தலில் உங்களை தோற்கடிக்க இதுதான் எங்களுக்குத் தேவையா? இந்த மாதிரி காட்டுமிராண்டிகளைத் தயார் செய்து, பாதுகாப்பதைவிட வேறு நல்ல வழியிலே உங்கள் நேரம் பயன்படலாமே என்று கூறினேன்!”

“இந்த வழக்கிலே எங்கள் அரசியலை இழுக்காமல் இருந்திருந்தால், நான் இங்கு வந்திருக்க மாட்டேன்!” என்றார் நெடுமாறன்.

“நாங்களா இழுத்தோம். இந்த ஆறுமுகமேதான், நல்லமுத்துவையும் உங்கள் சங்கத்தையும் இந்த வழக்கில் வெளியாக்கினான்!” என்று கூறி ஆதிமூலத்தைப் பார்த்தார், கிருஷ்ணசாமி.

ஆதிமூலம் அவர் கூறியதை ஆமோதிக்கும் பாணியில் தலையை அசைத்தார்.

இதைக்கண்ட நல்லமுத்து துள்ளி எழுந்து, ஆறுமுகம் போன்றவர்கள் எங்கள் பெயரைக் கூற வேண்டிய காரணம் என்ன? உங்களைப் போன்றவர்கள் செய்யும் தப்புப் பிரச்சாரத்தால்தான்! ஆம், தேசியத்தின் பெயரால் நாட்டு மக்களை ஏமாற்றும் தங்களைப் போன்றவர்கள், நாட்டிலே நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடும் எங்கள்மீது விசிடும் வீண் பழிகளால்தான், ஆறுமுகம் போன்றவர்கள் தவறு செய்கின்றனர். இந்த ஆறுமுகம் ஏன் இந்தப் பொய் சொன்னான் என்பதை விளக்கினாலே, நாட்டுமக்களுக்கு நாங்கள் பெரும் சேவை செய்தவர்களாவோம்!” என்று கத்தினான்.

நல்லமுத்துவின் சிறுபிரசங்கத்தை மிக அலட்சியமான பார்வையோடு கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணசாமி அவன் பேசிமுடித்தவுடன் தன் பையிலிருந்த சிகெரெட்டை எடுத்து பற்றவைத்தவண்ணம் அறையின் குறுக்கே நடந்தார். சிறிது தூரம் சென்று திரும்பி நல்லமுத்துவையும் ஆறுமுகத்தையும் உற்றுப் பார்த்தார். பிறகு நெடுமாறனைப் பார்த்தார். அடுத்து அவர் சிரித்த ஏளனச் சிரிப்பின் ஒலி அந்த அறை பூராவும் எதிரொலித்தது.

“ஆறுமுகம்! இந்த நிமிஷத்திலே நீ எவ்வளவு பெரிய மனிதனாக்கப் பட்டிருக்கிறாய், பார்த்தாயா? மக்களுக்கு உழைக்கிறேன் என்ற தத்துவம், அதற்கு ஏழை பணக்காரன் என்ற அணிகலன். அதிலே வரும் லாபத்தைச் சுருட்ட ஆறுமுகம் பலி!பலி!!” என்று கூறிவிட்டு மறுபடியும் உரக்கச்சிரித்தார் கிருஷ்ணசாமி.

நல்லமுத்துவும், நெடுமாறனும் பேசாமல் அவரை வெறுப்போடு பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தனர். ஆறுமுகத்திற்கு அவர்கள் பேசிக் கொள்வதின் முழு அர்த்தமும் விளங்கவில்லை. மறுபடியும் நல்லமுத்து பேசுவதற்குள் கிருஷ்ணசாமியே பேச ஆரம்பித்தார்.

“ஆறுமுகம்! இவர்கள் பேச்சைக் கேட்டு ஏமாறாதே! ஒன்றை மாத்திரம் நிச்சயமாகத் தெரிந்து கொள்! ஆம்! நீ தப்பிக்க முடியாதபடி மாட்டிக் கொண்டிருக்கிறாய். இந்த உண்மையை நன்கு புரிந்து கொள். உன்னை ஏழு ஜென்மத்திலும் தூக்கில் மாட்டுமளவு சாட்சியங்கள் வைத்திருக்கிறோம்! ஆகவேவெட்டி ஆட்கள் செய்யும் வீண் உபதேசங்களைக் கேட்காமல் உன் வாக்குமூலத்தைக் கொடுத்து விடு!” என்று கூறிக் கொண்டே ஆறுமுகத்தினருகில் வந்தார்.

அவர் கூறியதில் தொனித்த பயங்கர உண்மையை அவனால் நன்கு உணர முடிந்தது. பார்க்கப் போனால் அதை அவன் முன்பே உணர்ந்திருந்தான். ஆகவே தான் இரண்டு நாட்களாய் அவனுக்கு உணவே செல்லவில்லை. ஆனால் நல்லமுத்துவும், நெடுமாறனும் அந்தப்பயத்தை ஓரளவு போக்கி இருந்தனர். கிருஷ்ணசாமி பேசியவுடன் மறுபடியும் அந்தப்பயம் வந்து விட்டது. அவன்முகம் சிறுத்தது. கண்கள் குவிந்தன, யாரையும் நிமிர்ந்து பார்க்கக்கூட அவனுக்குத் தைரியம் வரவில்லை.

இதற்குள்நெடுமாறன் பேசஆரம்பித்தார்.

“ஆறுமுகம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைப்பற்றி என்னோடு பேசி முடிவு செய்து கொள்வான். அதற்குள் நீங்கள்குறுக்கிட்டு அவனைப் பயமுறுத்தத் தேவையில்லை” என்றார் நெடுமாறன்.

கிருஷ்ணசாமி நெடுமாறனை முறைத்துப் பார்த்து “மிகப் பெரிய இடத்தில், மிகக் கோரமாக நடந்த கொலை இது, மிஸ்டர் நெடுமாறன்! உத்தமநாதருடைய குடும்பத்தை எதிர்த்து எவனுமே உருப்பட்டதில்லை. அதுவும் இந்த மாதிரி சந்தர்ப்பத்திலே, இவனுக்காக ஆயிரம் ஆண்டுகள் வாதிட்டால்கூட, உங்களால் இவனை வெளியே கொண்டு வரமுடியாது!” என்று கூறினார்.

“அதைப்பற்றி நான் சிந்தித்துக் கொள்கிறேன், மிஸ்டர் கிருஷ்ணசாமி! யாருக்காக எப்படி வாதிட வேண்டுமென்று எனக்குத் தெரியும்!” என்று திருப்பிப்பளிச்சென்று கூறினார் நெடுமாறன்.

கிருஷ்ணசாமி அதற்குமேல்பேசுவதற்குள் அந்த அறைக்குள்ளே ஒரு போலிஸ்காரன் வேகமாக ஓடிவந்தான். ஆதிமூலம் உடனே அவனருகில் போனார்.

“பாஸ்கரும், புஷ்பாவும் வந்திருக்கிறார்கள், ஸார்!” என்று கூறி நின்றான் அவன்.

ஆதிமூலம், கிருஷ்ணசாமியை பார்த்தார். கிருஷ்ணசாமி அங்கு நின்ற எல்லோரையும் ஒரு தடவை சுற்றிப்பார்த்தார். மறுபடியும்அங்கு வந்து நின்ற போலிஸ்காரனைப் பார்த்து “அவர்களை உள்ளே அழைத்து வா!” என்றார். உடனே அவன் வெளியேறினான்.

அறை நிசப்தமாகியது. நல்லமுத்துவும், நெடுமாறனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆதிமூலமும், கிருஷ்ணசாமியும் வாயிற்படியை நோக்கினர்.

நடுவிலே தலையிலே கை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஆறுமுகம். அவனுடைய உடலெல்லாம் வியர்த்துக் கொட்டிக்கொண்டிருந்தது. அங்கு நடக்கும் காட்சி எதுவும் அவனுக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. அவனுடைய வாழ்க்கையில் அவன் செய்த தவறுக்காக, இத்தனை பேர்களுக்கு இடையில் அவன் மாட்டிக் கொள்வான் என்று கனவிலும் எண்ணவில்லை. அவர்களைப்பார்க்கப்பார்க்க அவன் மனம்இன்னும் செயலற்றுப் போய்க் கொண்டிருந்தது.

இந்த நேரத்திலே அறைக்குள் பாஸ்கரும் புஷ்பாவும் நுழைந்தனர்.

ஆறுமுகம் பயந்து எழுந்து நின்றான்.

பாஸ்கர் அவனையே உற்றுப் பார்த்தார். கிருஷ்ணசாமியும் ஆதி

[12-ம் பக்கம் பார்க்க]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணித்து நடக்கிறோம் என்று தாங்கள் தவருகக் கருதவேண்டாம்."

*

"உண்மையாகவே உங்களுக்கு காந்திஜியிடத்தில் அன்பும் அவருடைய உபதேசங்களில் நம்பிக்கையும் இருந்தால் இப்படியெல்லாம் செய்திருக்கமாட்டீர்கள்."

"அண்மையில் நான் மைசூருக்குப் போனபோதுகூடச் சிருங்கேரி மடத்துக்குச் சென்று சங்கராச்சாரி சுவாமிகளைத் தரிசித்தேனேயொழிய, மாதா கோவிலுக்குச் சென்று பாதிரியாரைத் தரிசிக்கவில்லை. அந்த அளவு சுதேசிப் பற்றுதலோடு காந்தியத்தைப் பின்பற்றிவரும் என்னைப்புரிந்துகொள்ளாமல், எனக்கு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள்!"

*

"எந்தக் காரியத்தைக் குறிப்பிடுகிறீர்கள் என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையே!"

*

"புரியவில்லையா? அதோ பாருங்கள் துப்பாக்கி சகிதம் இரண்டு போலிஸ்காரர்கள் காவல் புரிந்த வண்ணம் உள்ளனர்,"

*

ஓ! அதுவா அங்கே தான், தங்களுக்காக ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்ட விலை உயர்ந்த கார் இருக்கிறது."

*

"எனக்குக்கார்! ஜெர்மனியிலிருந்து! விலை ஏறிய கார்! வீரர்கள் காவல்புரிய வேண்டிய அளவுக்கு மதிப்புப் பெற்ற கார்! காந்தியத்தில் பற்றுக்கொண்டு சுதேசியில் ஊறிக்கிடக்கும் எனக்கு ஜெர்மனியிலிருந்து கார்! இதைவிட அவமானம் எனக்கும் என்னைத் தலைவராகக்கொண்ட இந்தப் பாரதத்துக்கும் வேறு இருக்க முடியுமா?"

"அண்ணல் காந்தி உயிரோடு இல்லை என்ற தைரியம்தானே இப்படியெல்லாம் செய்யும்படி உங்களை ஆட்டிப்படைக்கிறது"

"எங்கள் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பாருங்கள் என்று அவனி அதிரப் பேசும் நீங்கள் எனக்கு ஜெர்மெனியிலிருந்து கார் வரவழைக்கிறீர்கள்! வெட்கம்! வெட்கம்!! வேதனை விலாவைக் குடைகிறது!"

"ஐந்தாண்டுத் திட்டத்தையும் இவ்விஷயத்தையும் ஒன்ருகப் போட்டுக் குழப்பவேண்டாம். ஆரம்ப தசையிலிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தால் இவ்வளவு அழகான காரை உற்பத்தி செய்ய முடியாதென்பதை அறிந்தே தான் ஜெர்மனிக்கு ஆர்டர் கொடுத்து இந்த அற்புதமான காரை வரவழைத்திருக்கிறோம்"

*

"போதும் உங்கள் வாய்ச்சொல் வீரம்! தேசியம் பேசிச் சுதேசியை ஆதரிக்கும் உங்கள் இலட்சணத்தைக் காந்திஜி நேரில் கண்டால் கண்ணீர் வடிப்பார். ஜெர்மனியிலிருந்து எனக்காக வரவழைக்கப்பட்டிருக்கும் இந்தக் காரைப் பார்க்கும்போதெல்லாம், இது காந்திஜியின் இலட்சியத்தைக் காற்றில் பறக்கவிடும் ஒரு அறிகுறியாகவே எனக்குத் தோன்றுகிறது. எனக்கு மட்டுமென்ன! காந்தியத்தைத் தெளிவாக உணர்ந்த எவருக்கும்தான் இந்த எண்ணம் உதயமாகும்"

*

இப்படி ஒரு உரையாடல் ராஷ்டரபதி ராஜேந்திர பிரசாத்துக்கும் டில்லியிலுள்ள சர்க்கார் நிர்வாகத் தலைமையினருக்கும் இடையே நடந்திருக்க வேண்டும் — அதைத்தான் இங்கு வெளியிட்டிருக்கிருர்கள்—டில்லி சர்க்கார் அண்மையில்தான் ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு ஜெர்மனியிலிருந்து ஒரு விலையுயர்ந்த அழகான காரை வரவழைத்தார்கள்—அதைத்தான் குறிப்பிடுகிறோம் என்று வாசகர்கள் நினைக்கக்கூடும்! ஆனல் இந்த உரையாடல் உண்மையாகவே நடக்கவில்லை. ஜனதிபதிக்காக வாங்கப்பட்ட அந்தக் கார், அவருடைய விருப்பப்படி வாங்கப்பட்டதா அல்லது டில்லி சர்க்கார் இப்படியொரு காரியம் செய்வதால் தங்களுடைய கௌரவம் உயரும் என்ற நினைப்போடு அவர்களாகவே வாங்கினர்களா என்ற விபரத்தை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லையென்ருலும், ராஜேந்திர பிரசாத்மற்றத்தேசியவாதிகளைப்போல அபிநய காந்தியவாதியாய் இல்லாமல், ஓரளவுக்கு உத்தமர் காந்தியின் உபதேசங்களைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்பதில் நாட்டங்கொண்டவர் என்பதை நாம் அறிவோம். நாம் கூறுவதை வலியுறுத்தும் முறையில் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவையொட்டி புது டில்லியிலுள்ள ராஜ்காட்டில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் இதுபற்றிய சில உண்மைகளை வெளியிட்டிருக்கிருர். வெளிநாட்டுச் சரக்குகளை வாங்குவது அடாது என்று கூறியதோடுமட்டும் அவர் தம்முடைய சுதேசிப் பற்றை நிறுத்திக்கொள்ளவில்லை. வெளிநாட்டவர்களைத் தேசியவாதிகள் உபசரிக்கும் முறையைக்கூட அவர் வன்மையாக்க் கண்டிக்கிருர்.

"ஆங்கிலேயன் ஒருவனை நம் வீட்டுக்கு அழைத்தால், நாம் உண்ணும் உணவை அவனுக்குப் பரிமாருமல் அவன் தினம் சாப்பிடும் மேல்நாட்டு உணவையே அவனுக்குப் பரிமாறுகிறோம். நாம் உட்கார்ந்து சாப்பிடுகிறமாதிரி இல்லாமல் மேசை நாற்காலி போட்டு மேனுட்டு முறையில் சாப்பிடச் செய்கிறோம். மேனுட்டாருக்கு அவர்களுக்குப் பழக்கமானவற்றையே கொடுத்து என்ன பலன்?"

என்று இடித்துக் கேட்கிருர், இராஜேந்திரர். இது, அவரிடத்தே குடிகொண்டிருக்கும் பழமைப்பிடியின் முழு வடிவத்தை வெளியே காட்டுகிறதென்ற போதிலும், சுதேசிக்குத் தாம் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிக மதிப்புத் தருபவர் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு என்ற நினைப்போடு அவர் இப்படிப் பேசியிருக்கிருர் என்று வைத்துக்கொள்வதில் நமக்கொரு நஷ்டமும் இல்லை. ராஷ்ட்ரபதி ராஜேந்திர பிரசாத் அவர்கள் இன்னும் ஒரு முக்கியமான உண்மையை வெளியிட்டிருக்கிருர்.

"அயல் நாடுகளுடன் நாம் நட்புறவு கொண்டிருப்பது உண்மைதான். ஆனல், நாம் அவர்களிடமிருந்து சதா கடன் வாங்குவதா அல்லது நாமும் அவர்களுக்கு ஏதாவது கொடுப்பதா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்"

என்று நேரு பண்டிதரை நேராகப் பார்த்துக் கேட்பதுபோல் பேசியிருக்கிருர். பிரசாத்தின் இந்தப் பிரசங்கம்-அல்ல, அல்ல-தெளிவுரை, தேசியம் பேசும் காந்தியவாதிகளின் கன்னத்தில் அறைந்து கேட்பதுபோன்ற ஒரு சிறந்த உரையாகும். கையில் இருப்பதைக் கொள்ளைபோக விட்டுவிட்டு அயலானிடம் கை நீட்டிக் கடன் கேட்கும்கையாலாகாத்தன்மைக்கு ராஜேந்திரரின் இந்த இடித்துரை நல்ல பாடம் கற்பிக்கும் என்றேநம்புகிறோம்.

காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவில், நாட்டின் தலைவர், நாட்டின் நாயகர்களுக்குக் கூறிய இவை போன்ற சிறந்த உண்மைகளை ஆதாரமாக வைத்துத் தீட்டப்பட்ட கற்பனை உரையாடல் தான் இது. என்ருலும் காந்தியவாதிகளின் கவனத்தை இந்த உரையாடல் கட்டாயம் இழுக்கும் என்ற நம்பிக்கையோடு இதனை எழுதுகிறோம்.

"ஊருக்கேயொழிய உபதேசம் உனக்கல்ல" என்ற பழமொழியை எவ்வளவு அக்கரையோடு காந்தியவாதிகள் காப்பாற்றுகிருர்கள் என்பதை எடுத்துக்காட்ட இவ்வுரையாடல் பயன்படட்டும். ★

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95 Tirukkachinambi St, Kancheepuram.